உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 36 | நள - மாசி - 10—3—77 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

பரம்பொருளின் பார்வை

மனிதகுல வளர்ச்சியின் அடிப்படை :

பேராற்றல்பெற்ற இறைவனே இயற்கை. அதனிடையே நிலவும் ஒழுங்கான இயக்கத்தை மனிதஇனம் உணர்ந்திருக்கிறது. கட்புலனுக்கு வாராத இப்பேராற்றலை, அறிவின் துணைகொண்டு ஆராய்ந்து காண முற்படுவதை விட, உணர்வின் துணைகொண்டு அறிந்து கொள்ளுதல் சிறப்புடையதாகும். இத்தகு நுண்ணுணர்வு பெற்ற சான்றோர்களே காணப்படும் உலகியல் பொருள்களுக்கு அப்பால், இவற்றை யெல்லாம் இயக்கும் பேராற்றலாகத்திகழும் கடவுள் தன்மையினை உணர்ந்து விளக்கியுள்ளனர். எல்லாப் பொருள்களோடும், ஒன்ருகவும், வேருகவும், உடனுகவும் கலந்து நின்று இயக்கும் இறைவனை அறியவும், உணரவும் முயலுதலே மனிதகுல வளர்ச்சியின் அடிப்படையாகத் திகழ்கின்றன.

பரம்பொருளின் பார்வை :

நம்முடைய ஒவ்வொரு செயலும், நம்மினும் மேம்பட்ட பரம்பொருள் ஒன்ருல் கண்காணிக்கப்படுகிறது என்பதனை மனித இனம் உணர்ந்தால், சமுதாயத் தீமைகளும், கீழ்மைகளும் நிச்சயமாகக் குறையும். புலனுணர்வுகளுக்கு அப்பால், பொறி புலன்களைக்கடந்த பரம்பொருள் ஒன்றின் பார்வை நமது செயல்கள்மேல் படுகிறது என்ற கருத்தினை உலகிடை உள்ள எல்லாச் சமயங்களும் ஒருசேர உணர்த்துகின்றன. மனிதன் தன் அறியாமையால் இறைவனையும் ஏமாற்றிவிடலாம் எனக் கருது கின்ருன். ஆனுல் சமயங்கள், அவன் எண்ணத்தை மாற்றி, எல்லாச் செயல்களும், நம்மினும் பெரிய சக்தி ஒன்ருல் கண்காணிக்கப்படுகின்றன என்பதனைப் பல்வேறு கோணங் களில் விளக்குகின்றன.

அடைக்க இயலாச் சாளரம் :

இசுலாமியச் சமயச் சிறுகதை ஒன்று இதனை விளக்கும். ஏழடுக்கு மாளிகை ஒன்றில் மன்னன் ஒருவன் தனிமையில் விற்றிருக்கின்ருன். இளமையும் அழகும் கொண்ட பணிப் பெண்ஒருத்தி, மன்னன் இருக்கும் தனி இடத்தைத் தூய்மை செய்ய வருகிருள். அப்போதிருந்த மன்னனது மனநிலையும், தனிமையும், பணிப்பெண்ணின் இளமையிலும் அழகிலும் மன்னனைத் தடுமாற வைக்கின்றன. உடல் உறவுகொள்ளும் நோக்கில், மன்னன் பணிப்பெண்ணிடம் எல்லாக் கதவுகளையும் அடைக்கும்படிக் கட்டளை இடுகிருன். மன்னனது அப்போதைய நிலையை உணர்ந்த பணிப்பெண், எல்லாவற்றையும் அடைத்து விட்டு மன்னன்முன் வருகிருள். 'எல்லாச்சாளரங்களையும் மூடி விட்டாயா' என மன்னன் வினவுகிருன். 'இரண்டு சாளரங் களைத் தவிர மற்றவற்றை எல்லாம் மூடி விட்டேன்' என அவள் பணிவுடன் விடைகூறுகிருள். 'ஏன் அவற்றை அடைக்கவில்லை' என்று மன்னன் கேட்டதும் 'அடைக்க இயலாத அந்த இரண்டு சாளரங்கள் இறைவனது இரண்டு கண்களே! அவற்றை யாரால் அடைக்கக்கூடும்' என்று வினவுகின்ருள். இச்சொல்லால் தீய உணர்வு நீங்கிய மன்னன், அவளையே தனக்கு அறிவு வழங்கிய ஞான குருவாகக் கொண்டு போற்றுகின்ருன்.

மனிதர்களது கண்களை வேண்டுமாளுல் மறைக்கலாமே தவிர இறைவனது கண்காணிப்பிலிருந்து எவரும் தப்பிவிட முடியாது என்பதனை இச்சிறு நிகழ்ச்சி அழகுற விளக்குகின்றது. இக்கருத்து எல்லாச் சமயத்திற்கும் உடன்பாடே.

விஞ்ஞானி கண்ட மெய்ஞ்ஞானம் :

எல்லாவற்றையும் கண்காணிப்பது மட்டுமின்றி, யாவற்றை யும் இறைவன் செவிப் புலனாகக் கேட்கவும் செய்வான் என்பதனை விஞ்ஞானி ஒருவரது கூற்று விளக்குகின்றது. கம்பி இல்லாத தந்தி முறையினைக் கண்டுபிடித்த மார்கோனியைச் சூழ்ந்து கொண்டு, இக்கண்டுபிடிப்புத் தொடர்பாக உலக மக்களுக்கு நீங்கள் விடுக்கும் செய்தி என்ன என்று மக்கள் வினவினர். " நான் சிறுவனாக இருக்கும்போது, என் தந்தை, பிரார்த்தனை செய்; பரமண்டலத்தில் இருக்கும் இறைவன் செவியில் அவை விழட்டும் என்பார். அப்போது, அறைக்குள் இருந்து நாம் பிரார்த்திப்பது பரமண்டலத்தில் இருக்கும் கடவுளுக்கு எங்கே கேட்கப் போகிறது என்று கருதினேன். ஆனால், இன்று இங் கிருந்து நாம் பேசும் சொல் தொலைவில் மற்றொருவரால் கேட்கக் கூடியதாக இருப்பதைக் கண்டறிந்தபிறகு, நாம் பேசுவதை எல்லாம் இறைவன் கேட்டுக்கொண்டே இருக்கிறான் என்பதை உணர்கிறேன். இதனால் பயனில்லாதசொற்களைப் பேசக்கூடாது என்பதை காண்கிறோம்.

தமிழர் உணர்ந்த தத்துவம் :

நமது சைவ - சமயம் இக்கருத்திலே உறுதியான நாட்ட முடையது. இன்றியமையாத் திசைகள் நான்கு. இத்துடன் மேல் கீழ் என இரண்டும் கூட ஆறுதிசைகள். இறைவன் எல்லாம் அறிபவன் என்பதனை உணர்த்தவே இறைவனுக்கு ஆறுமுகங்கள் உள்ளன. ஆறுமுகங்களிலும் உள்ள பன்னிரு கண்களாலும் பார்ப்பதால் மீனின் பார்வையில் அதன் குஞ்சுகள் பயனடைவதுபோல் எல்லாவுயிர்களும் ஈடேற்றம் பெறுகின்றன. எல்லாத் திசைகளிலும் நடைபெறும் எல்லாச் செயல்களையும் பன்னிரண்டு கண்களாலும் கண்டுகொள்ளும் பேராற்றல் அவனுக்கு உண்டு எனப் போற்றியபெருமை தமிழர்களுக்கு உரியது. இவற்றால் உலகில் எல்லாச்சமயங்களுமே 'மனித செயல்களைக் கண்காணிக்கும் ஒரு பெருஞ்சக்தி உண்டு, என் பதனை உடன்படுகின்றன' என்பதனை அறிய முடிகிறது.

செயல்களுக்குரிய விளைவு :

விஞ்ஞான ரீதியாகவும் ஒன்றை எண்ணிப் பார்க்கலாம், விண்ணிடை நிலவும் கோள்கள் ஒன்றோடு ஒன்று ஒருவகை ஈர்ப்புச் சக்தியால் நிலை தடுமாறாது நிலவுகின்றன என அறிஞர்

கூறுவர். அவ்வக் கோள்களின் ஈர்ப்புக்குள் சென்றால் அவை அவ்வாறு செல்லும் பொருட்களைத் தன்பால் இழுக்கின்றன எனவும் அறியமுடிகிறது. மண்ணிடை மக்கள் ஒவ்வொருவரும் பிறந்தபோது இருந்த நாள் மற்றும் கோள்களின் நிலைமைக்குத் தக; அவரவர்களுக்கு, நன்மைதீமைகள் விளைவதை இன்று விஞ்ஞானமும் ஒத்துக்கொள்கிறது. மனிதனுடைய பிறப்பிற்கும் கோள்களின் இயக்கத்திற்கும் ஒருவிதத் தொடர்பு இருப்பது போல மனிதனுடைய, எண்ணங்கள், அவனது செயல்கள் இவற்றிற்குத் தக ஓர் எதிர் விளைவு உண்டு என்பதை உணர்வது அனைவருக்கும் அறிவு அடிப்படையில் இயலக்கூடியதே. சமுதாயத்தின் ஒருமித்த நல்லுணர்வு அல்லது தீயவுணர்வு களுக்குரிய ஒருவிதமான எதிர்விளைவு நம்மைஎன்றும் சந்திக்கும் என்பதனை சமய அடிப்படையிலும், விஞ்ஞான அடிப்படையிலும் உணரலாம்.

இறைவன் அறியாச் செயல் உண்டோ?

மனிதன் எத்துணை நுண்ணறிவுடையவனாகத் திகழ்ந்தாலும் அவனுடைய அறிவுக்கும், அனுபவத்திற்கும் அப்பாற்பட்ட நுண் பொருளாகவே இறைவன் விளங்குகின்றான். இதனைத் திருக்குற்றாலத் தலபுராணப் பாடல் ஒன்று மிக நுட்பமாக விளக்குகின்றது. கண்ணுக்குப் புலப்படும் மலரில், கண்ணுக்குப் புலப்படாமல் தேன் இருத்தலை நாம் அறிகிறோம். ஆயின் காணமுடிவதில்லை. தேன் உண்ணும் தேனீக்கு அத்தேன் இருப்புத் தெரிகிறது. ஆனால் தேனீயாலும் அறியப்படாத தேனாக இறைவன் நுட்பமுற விளங்குகின்றான். மற்றும், எழுத்துக்களுக்குள் வாராத வேதப் பொருளாகவும் அவன் திகழ் கின்றான். இவ்வாறே காய் அறியாச் செழுங்கனியாகவும், கற்பகத் தின் பசுங் கொழுந்தாகவும் திகழும் இறைவன், தாம் கருவுற்றிருக் கிறோம் என்பதனைக் கருவைச் சுமந்திருக்கும் தாய் அறிவதற்கும் முன்னரே, உள்ளிருந்து அக்கருவிற்கு உணவூட்டும் தாய்க்கும் மேலாகிய துணையாகவும் திகழ்கின்றான். இவ்வாறு நுண்மையிலும் நுண்மையாகத் திகழும் இறைவன் அறியாத செயல்கள் ஏதும் உலகில் உண்டோ என அப்பாடல் வினாத் தொடுக்கிறது.

"ஈயறியாப் பசுந்தேனே எழுத்தறியா மறைப்பொருளே
காயறியாச் செழுங்கனியே கற்பகத்தின் பசுங்கொழுந்தே
தாயறியாக் கருவிலிருந்து அமுதூட்டும் தாய்த்துணையே
நீயறியாச் செயலுண்டோ நிகிலபரம் பரமூர்த்தி"

என்பது அவ்வரியபாடல். இவ்வழகிய நுட்பத்தைத் திருமந்திரம்

" இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்
தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மையெவ் வாறே"

எனத் தாய்த்துணையாக நிற்கும் இறைவனது கருணையினை விரிக்கிறது.

எதையும் எண்ணிச் செய்வோம்:

இன்றோ மக்களில், பள்ளிப் பிள்ளைகள் முதல், பாராளும் பெரியோர்கள் வரையில் மற்றவர்களை ஏமாற்றி விட்டதாகக் கருதுகின்றனர். உண்மையில் ஏமாற்றநினைப்பவர்களே ஏமாந்தவர்களாகி வருகின்றனர். எனவே, மக்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கு உரியநெறி நின்று, தமக்கு மேல் ஒரு பரம்பொருள் நமது செயல்களைக் கண்காணிக்கின்றது என்ற உணர்வோடு தங்களது கடமைகளைச் செவ்வனே செய்தல் வேண்டும். செயல் எதுவானாலும், அதனுடைய பின்விளைவினை முன்கூட்டியே ஆய்ந்தறிந்து உரிய நேரத்தில் உரியவகையில் செயல்படுவதே மக்களது இன்றியமையாக் கடனாகும்.

சிறுவர்களுக்கு:

உங்கள் திறமைக்கோர் சோதனை!

(வி. சா. கு.)

வண்டுகளின் கணக்கு

ஒரு தாமரைத் தடாகம். தடாகத்தில் தாமரைப் பூக்கள் சில மலர்ந்துள்ளன. சில வண்டுகள் வந்து பூ ஒன்றுக்கு ஒரு வண்டு வீதம் அமர்ந்தன. ஒரு வண்டுக்குப் பூ இல்லை. அதைக் கண்ட எல்லா வண்டுகளும் எழுந்தன. பூ ஒன்றுக்கு இரண்டு வண்டுகள் வீதம் அமர்ந்தன. ஒரு பூ மீதமாயிற்று. வந்த வண்டுகள் எத்தனை? தடாகத்தில் மலர்ந்திருந்த தாமரைப் பூக்கள் எத்தனை?

சென்ற இதழ்க் கணக்கின் விடை

(மலர் 36 இதழ் 3 பக்கம் 152)

$36 + 36 + 18 + 9 + 1 = 100.$

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவாதிரைத் தரிசனத்திற்கு எழுந்தருளியபோது
சிதம்பரம் - கனகசபைநகரில் உள்ள
தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில்

தில்லைத் தமிழ் மன்றத்தினருக்கு

வழங்கியருளிய

ஆசியுரை

5—1—1977

" ஆசையறுப் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் அஞ்செழுத்தை நீநினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்".

பிறவி யாருக்கு ? ஏன் ?

பிறப்பு இறப்பு அற்றவன் இறைவன். பிறப்பு இறப்பு உறுவன உயிர்கள். விருப்பு, வெறுப்பு அற்றவன் இறைவன். விருப்பு வெறுப்பு உறுவன உயிர்கள். விருப்பு வெறுப்பு அற்றவன் இறைவன் என்பதை,

" வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

என்ற குறளால் தெளிய விளக்குகிறார் திருவள்ளுவர். எவ்வளவுக்கு எவ்வளவு உயிர்கள் விருப்பு வெறுப்புக்களில் ஈடுபடுகின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு பிறப்பு இறப்புக்களில் உழல்கின்றன. விருப்பு, வெறுப்புக்கள் இல்லாமையால் இறைவன் பிறப்பதும் இல்லை ; இறப்பதும் இல்லை. பிறப்பு

என்பது உயிர்கள் கருவிகரணங்களுடன் கட்டுப்படுவது. இறப்பு என்பது கருவி கரணங்களினின்றும் விடுபடுவது. இதனை,

" கட்டறுத்தெனை யாண்டு கண் ணார நீ
றிட்ட அன்பரொடியாவருங் காணவே
பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
எட்டிரேடிரண்டும் மறியே னையே "

என்னும் மணிவாசகரது மணிமொழியால் அறியலாம். பிறப்பு என்பதும், இறப்பு என்பதும் உயிர்களின் உய்விற்காக இறைவனால் அருளப் பெறுகின்றன. ஆணவம் என்கின்ற பேரிருளில் அழுந்திக் கிடக்கும் உயிரை, அவ்வுயிர் உய்தி பெறுவதற்காக மாயையால் ஆக்கப்பட்ட தனு, கரண, புவன போகங்களில் பெருங் கருணையினால் கூட்டிவைக்கின்றான் இறைவன். (தனு - கண்ணுக்குத் தெரிகின்ற உடல், கரணம் - கண்ணுக்குப் புலப்படாத மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்கள். புவனம் - உலகம், போகம் - இன்பத் துன்பங்கள்) இறைவன் உயிர்களுக்குச் செய்கின்ற பெருங்கருணை இதுவே. உயிர்களை இறைவன் படைப்பது இல்லை. இறைவன் என்று உண்டோ அன்றே உயிர்களும் உள்ளன. ஆனால் இறைவன் ஒருவன்; உயிர்கள் பல. ஆணவம், கர்மம், மாயை என்ற மும் மலங்களும் பாசம் எனப்படும்; இவையும் என்றும் உள்ளன வேயாம். உயிர்கள் ஆணவப் பிடிப்பினின்றும் விடுபட்டு உய்தி பெறுவதற்காகவே மாயையைக்கொண்டு தனு, கரண, புவன, போகங்கள் இறைவனால் அருளப்பெற்றன. ஆணவம் என்கிற பேரிருளில் அழுந்திக்கிடக்கின்ற உயிர்மீது இறைவனின் கருணை நோக்கம் சிறிது படுகிறபோது உயிருக்கு அசைவு அல்லது செயல் உண்டாகிறது. அந்தச்செயலைத்தான் கர்மா என்கிறோம். அந்த உயிரின் கர்மாவிற்கு ஏற்பவே முன் குறிப்பிட்டபடி தனு கரண புவன போகங்களை இறைவன் உயிர்களோடு இணைக்கிறான்.

உடல் இன்றி உயிர் உணருமா ?

உயிரைப் பற்றியிருக்கின்ற ஆணவத்தினின்றும் எழுகின்ற ஆசாபாசங்களால் நமக்குப்பிறவிகள் தொடர்கின்றன. உயிர்கள் தனுகரணாதிகளைக் கொண்டே உலகில் பொருள்களை உணர்கின்றன. உடல் முதலிய கருவிகள் இல்லாதபோது உயிர் ஒன்றையும் உணர இயலாது. இறைவனோ கருவி கரணங்கள் யாதொன்றும் இல்லாமலே எல்லாவற்றையும் அறியவும் செய்யவும் வல்லவன். அதனால்தான் அவனுக்குக் கருவி கரணங்களின் கூட்டாகியபிறப்பு இல்லையாயிற்று. பிறப்பு இல்லையெனவே

இறப்பும் இல்லையாயிற்று உயிர்களும், பிறப்பு இறப்புக்களை அடைவதால் ஆணவத்தினின்றும் வருகின்ற ஆசாபாசங்களை அகற்றி, பக்குவம் அடைந்து விருப்பு வெறுப்பு அற்ற ஓர் நிலைமை எய்தும். அப்போது உயிருக்கும் பக்குவம் அடைந்து பிறப்பு இல்லையாகிறது. உயிர்கள் பிறப்பு அறுமானால் உடல் முதலிய கருவிகள் இன்றியே இறைவனைப்போலவே எல்லாவற்றையும் உணரவும் செய்யவும் வல்லனவாகும். அந்த நிலைமைக்கு நம்மை உயர்த்துவதற்குத்தான் இறைவன் பிறப்பைக்கொடுக்கின்றான்.

ஆசையே பிறவிக்குக் காரணம் :

இவற்றையெல்லாம் திருவருளால் நன்கு உணர்ந்த நமது ஆதீன ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் பிறப்பு வரும் வழியையும், அதனை அகற்றும் வழியையும், அகற்றுவதற்கு நாம் மேற்கொள்ளவேண்டிய முறைகளையும் தெளிவாக சிவபோகசாரப் பாடலில், ஒன்றற்கொன்று தொடர்புபடுத்தி நம் மீதுவைத்த பெருங்கருணையினால் விளக்கியருள்கின்றார். முதலில் ஆசை அறவேண்டும் என்று குறிப்பிடுகின்றார் ஸ்ரீ குருஞான சம்பந்தர், இதனைத் திருமூலரும்,

“ ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே! ”

என்று அறுதியிட்டுக்கூறுகின்றார். திருவள்ளுவரும் ஆசையாகிய அவாவே பிறப்பிற்கு வித்தாகிறது என்பதை அழுத்தம் திருத்தமாக அறிவிக்கின்றார்.

“ அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து ”

இத்தகைய ஆசை அறவேண்டுமானால் இந்த ஆசை எங்கிருந்து வருகிறது என்பதை முதலில் அறிதல் வேண்டும். எதுபோல வெனில்; ‘ஒருவனுக்கு நோய் வருகிறதென்றால் அது எதனால் வருகிறது, எங்கிருந்து வருகிறது, அதைப் போக்கும் வழி என்ன என்பதை முதலில் உணரவேண்டும்’ என்று திருவள்ளுவர் தெளிவிக்கின்றார்.

“ நோய் நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். ”

அதுபோல, ஆசையும் எங்கிருந்து உண்டாகிறது, அதைப் போக்கும் வழி என்ன என்பதை முதலில் சிந்திக்க வேண்டும். ஆசை என்பது நோய். ஆணவம் என்பது நோய் முதல்.

ஆணவத்தைப் போக்கும் வழி, இறைவனது திருவடியைப் பற்றுவதே.

பாசம் நீங்கப் பற்ற வேண்டுவது :

இந்தக் கருத்துக்களை யெல்லாம் உள்ளடக்கி, ஆசை அற வேண்டும் என்று குறிப்பிட்ட குருஞானசம்பந்தர் அடுத்ததாக அதற்கு மூலமாக இருக்கின்ற பாசத்தை விடவேண்டும் என்றார். பாசம் விடுவதற்கு என்ன வழி என்றால் சிவபூசைபண்ண வேண்டுவதேயாம் என்கிறார்.

திருவள்ளுவரும் இக்கருத்தை,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்ற குறளால் தெளிய விளக்கியுள்ளார்.

ஆசை அறவேண்டுமானால் அதற்கு மூலமாகிய ஆணவம் அகலவேண்டும், ஆணவம் அகலாதபோது ஆசை அறாது. ஆசை அறவும் பாசம் விடவும் சிவபூசை பண்ண வேண்டுமானால் அதற்கு முதற்படியாக, தகுந்த ஆசாரியரிடத்தில் சமய விசேடம் முதலியதீட்சையுடன் அஞ்செழுத்தைஉபதேசமாகப்பெற்று நேச முடன் நினைந்தும் ஓதியும் வருதல் வேண்டும். இப்படி சிவபூசை செய்தும், அஞ்செழுத்து ஓதியும் வரும் சிறப்புடையவர்கட்கும் ஓரோவழி சினம் வரும். இதனையும் திருவள்ளுவர்,

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது.

என்ற குறளால் கூறியுள்ளார். குணக் குன்றாகத் திகழும் இத் தகையோருக்குச் சினம் என்ற சிறு குற்றம் இருக்குமானால் அது அவரையும் அவரைச் சார்ந்தாரையும் அழித்துவிடும். அரிதின் ஈட்டிய பலன் அனைத்தும் அழியும். எனவேதான்

"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்"

என்ற குறளால் சினத்தால் வரும் தீமையையும் விளக்கியுள்ளார். ஓரோ வழிவரும் சினத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக 'சினமே தவிராய்' என்றருளினர். சினம் தோன்றாதிருப்பதற்குத் 'திருமுறைகளை ஓதவேண்டும் என்றார்' என்னை எனில் சிவபரம் பொருளை வழிபட்டு நலம்பெற்றோர் வரலாறுகளையும், குணம் என்னும் குன்றேறி நின்ற ஞானியர்கள் சினத்தால் அழிந்த வர லாறுகளையும் பலகோணங்களில் திருமுறைகள் நமக்கு அறிவிக்

கின்றன. இத்திருமுறைகளை ஓதுவதால் சினம் தவிரும். எனவேதான் 'திருமுறைகள் ஓதாய்' என்றருளிச்செய்தார்.

மனத்தின் மாட்சி :

உயிர், மனிதன் என்று பெயர்பெறுதற்குக் காரணமாயுள்ள மனமே! நீ உயிருக்கு உறுதுணையாயிருந்து உதவும் ஆற்றல் உடையாய்; ஆசையறவும், பாசம்விடவும், சிவபூசைபண்ணவும், அஞ்செழுத்தை நினைக்கவும், சினம் தவிரவும், திருமுறைகள் ஓதவும் உனக்கு வாய்ப்பும் திறனும் இருந்தும் நீ அத்துணையைச் செய்யாமையால் உனக்கு என்ன சிறப்பிருக்கிறது? ஒன்றுமில்லையே! உனக்குத் தகுதியிருந்தும் தகுதியைத் தக்க வகையில் பயன்படுத்தாத குற்றவாளியாகிவிட்டாய்! எனவே, மனஉணர்வு இல்லாத ஏனைய சாதாரண பிறவியாகவே இருந்திருக்கலாமே. ஆறுவதாக மனஉணர்வைப் பெற்றதால் மனிதன் என்றபெயர் பெற்றும் அதற்கேற்ற பயனடையாதபோது விலங்காகவே இருந்திருக்கலாம் அல்லவா? உன்னைத் துணையாகப் பெற்றதால் எனக்கு என்ன சிறப்பைத் தேடித் தந்தாய் என்று கேட்கும் வகையில் 'மனமே உனக்கென்ன வாய்' என்றார். வாய்ப்பிருந்தும் செயல் படாமல் வாயோட்டமாகப் பேசுபவர்களை 'உனக்கென்ன வாய்வேண்டியிருக்கிறது' என்று சொல்வதை உலகியலில் காண்கிறோம். அவ்வுலகியலையே தமது மனத்திற்கு ஏற்றிக் கூறுகிறார்.

பஞ்சாட்சர விளக்கம் :

இன்று நடராசப் பெருமானுக்கு உகந்ததாகியதிருவாதிரைத் திருநாள். நடராசப்பெருமான் அஞ்செழுத்து வடிவாகத் திகழ்பவன். அப்பெருமானுக்கு உகந்த நாளில் அஞ்செழுத்தின் பொருளைக் கேட்பதும் சிந்திப்பதும் சிறந்ததாகும். அஞ்செழுத்தை ஆசாரியரிடம் முறைப்படி உபதேசம் பெற்று ஓதுவதே முறை. திருவாதிரைத் திருநாளுக்குரிய நடராஜப்பெருமான், அஞ்செழுத்து வடிவாக இருப்பவன் என்பதைத் திருமுறைகளும் சாத்திரங்களும் கூறுகின்றன. அஞ்செழுத்தைத்தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம், காரண பஞ்சாட்சரம், அல்லது அதிசூக்கும பஞ்சாட்சரம் என்று கூறுவர். நமசிவய என்பதைத் தூல பஞ்சாட்சரம் என்றும், சிவயநம என்பதைச் சூக்கும பஞ்சாட்சரம் என்றும், சிவயசிவ அல்லது சிவயவசி என்பதை அதிசூக்கும பஞ்சாட்சரம் என்றும்கூறுவர்.

(தொடரும்)

தருமையாதீனம் வைத்தீசுவரன்கோயில்
ஸ்ரீ கற்பககணேசர், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி, ஸ்ரீ தையல்நாயகி,
ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி சந்நிதிகளில்
திருவிளக்கு அறக்கட்டளைக்கு
ரூ. 1000 — 00

ஆயிரம் ரூபாய் காணிக்கை செலுத்தி அருள் பெறுவீர்!

தீராத நோயெல்லாம் தீர்த்தருளும் ஈசன் ஸ்ரீவைத்தியநாதப் பெருமான்; மங்கையர்க்கு மங்கலநாண் காத்தளிக்கும் தெய்வம் ஸ்ரீ தையல்நாயகி அம்மை; அவ்வுலகிற்கு ஆரருளும், இவ்வுலகிற்கு இரும்பொருளும் ஈந்தளிக்கும் முருகன் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி ஆகிய மூர்த்திகள் எழுந்தருளி அருள் வழங்கும் பிரார்த்தனைஸ்தலம் வைத்தீசுவரன்கோயில். ஷை சந்நிதிகளில் திருவிளக்கிடுவதற்கு நாள் ஒன்றுக்கு ரூ 100 – 00 ஆகிறது. பக்தர்கள் இவ்விளக்கீட்டுப் பணியில் பங்கேற்க ஒரு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

விளக்கிடுவதால் நம் அறிவு விளக்கம்பெறும். வீடும் நாடும் விளக்கமுறும். நாமும் நம் சந்ததியும் நல்லறிவு பெறுவோம். இதுபற்றியே "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" என்றார் அப்பர் பெருமான். "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்றார் திருவள்ளுவரும். "வினைதீர்த்தான் கோயில் விளக்கழகு" என்பது இக்கோயிலைப்பற்றிய பழமொழி; ஆதலால் இத்திருக்கோயிலில் திருவிளக்கு அறக்கட்டளை தொடங்கப்பட்டிருக்கிறது.

இந் நல்லறப்பணிக்கு இந்தியன் வங்கி மூலம் நிலையான முதலீட்டுத் தொகையாக ஸ்ரீ வைத்தியநாதசுவாமி ஆலயத்துக்கு ரூ. 1000 – 00 அனுப்பிவையுங்கள் உங்கள் காணிக்கை மாயூரம் இந்தியன் வங்கி கிளையில் உள்ள ஷை ஆலயத் திருவிளக்கு அறக்கட்டளை நிதியில் நிலையான முதலீடாகச் சேர்க்கப்படும். நீங்கள் குறிப்பிடும் ஏதேனும் ஒருநாளில் (பிறந்தநாள், திருமணநாள், முன்னோர் நினைவுநாள் போன்றவை) ஷை முதலீடு வட்டித் தொகையிலிருந்து உங்கள் குடும்ப நலங்கருதி ஷை சந்நிதிகளில் திருவிளக்கிட்டு அர்ச்சனை செய்யப்படும். நீங்கள் பிரசாதத்தை நேரிலோ தபால் மூலமோ நிரந்தரமாகப் பெறலாம். ஆகவே உடனடியாக உங்கள் காணிக்கையைச் செலுத்தி ஸ்ரீ வைத்தியநாதப்பெருமான் திருவருளைப் பெறுவீர்களாக.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் உத்திரவுப்படி
வித்துவான். இராமலிங்கத் தம்பிரான்.
கட்டளை விசாரணை.

உங்கள் காணிக்கைகளை இந்தியன் வங்கியின் எந்தக் கிளையிலும் செலுத்தலாம். இந்தியன் வங்கி (இந்திய அரசுக்கு முற்றிலும் உடைமையானது) தலைமை அலுவலகம், 17, வடக்கு கடற்கரைச்சாலை சென்னை - 600001.

"கனகமன்றில் அனகநாடகன்"*

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.,

முன்னுரை :

மேலை நாட்டு இல்லற வாழ்வின் இயல்புபற்றிப் பலவகையான நகைச் சுவை உரைகளை அறிஞர்கள் குறிப்பிடுவதுண்டு. அவைகள் பலவற்றுள், "உன்னுடைய குழந்தைகளும், என்னுடைய குழந்தைகளும், நம்முடைய குழந்தைகளோடு சண்டையிட்டுக் கொள்கின்றன" "Your children and my children are qnarreling in our children") என்று ஒரு மனைவி தன் கணவனிடம் தெரிவிப்பதாக அமைந்த சொற்றொடர் ஒன்று, அடிக்கடி அறிஞர்களால் கூறப்படும்.

இதன்கண் "என்னுடைய குழந்தைகள்" என்று மனைவி கூறுவதனால் அவள் இதற்கு முன்பு வேறொருவரை மணந்து குழந்தைகள் பெற்றிருந்தாள் என்று தெரிகின்றது. "உன்னுடைய குழந்தைகள்" என்றதனால் கணவன் இதற்கு முன்பு வேறொருத்தியை மணந்து குழந்தைகள் பெற்றிருந்தான் என்று புரிகின்றது. "நம்முடைய குழந்தைகள்" என்றதனால், முன்பு ஒருவனுக்கு மனைவியாய் இருந்தவளும், முன்பு ஒருத்திக்குக் கணவனாக இருந்தவனும் ஆகிய இவ்விருவரும், தம்முள் கணவனும் மனைவியுமாகப் புதிதாக மறுவலும் மணந்துகொண்டு, மற்றும் பல குழந்தைகளைப் பெற்றுள்ளனர் என்று புலப்படுகின்றது.

உறவுமுறைச் சிக்கல் :

இவ்வாற்றால், மேலை நாட்டுக் குடும்ப வாழ்வின் இயல்பு எத்தகையதென்று நாம் ஒருவாறு அறிதல் கூடும். இத்தகைய குடும்ப வாழ்வின் இயல்பினால், அந்நாடுகளில் மிகவும் சிக்கலான

---

* சென்னைத் தியாகராய நகர்த் தருமை யாதீன சமயப்பிரசார நிலையத்தில் தொடர்ந்து நடைபெற்றுவரும் 'திருக்கோவையார்' வகுப்பில் நிகழ்த்திய விளக்கவுரைக் குறிப்பினைத் தழுவி எழுதியது.

பலவகை உறவு முறைகளும், நம்மனோர்க்கு மனக் குழப்பம் விளைக்கத்தக்க வகையில், அமைவது உண்டு. அதனை விளக்கு தற்குப் பின்வருமாறு வழங்கும் 'உறவு முறைச் சிக்கற் புதிர்' (Puyzle) ஒன்றை, இனியதோர் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

"என் தந்தையே எனக்கு மருமகன் ஆகின்றார்; என் வளர்ப்புப் பெண்ணே எனக்குத் தாய் ஆகின்றாள்; என் சகோதரனே எனக்குப் பேரனாகின்றான்; என் மனைவியே எனக்குப் பாட்டி ஆகின்றாள்; நானே எனக்குப் பாட்டன் ஆகின்றேன்; இஃது எங்ஙனம் இயலும் என்று உங்களுக்குப் புரிகின்றதா? கூறு கின்றேன் கேளுங்கள்".

"வயது வந்த ஒரு மகள் உள்ள விதவையை, நான் மணந்துகொண்டேன். என் தந்தையார், என் மனைவி யின் அந்த மகளைக் காதலித்து மணந்துகொண்டார். இதனால் என் தந்தையாரே எனக்கு மருமகன் ஆனார். என் வளர்ப்புப் பெண் எனக்குத்தாய் ஆனாள். எவ்வாறு எனின், அவள் என் தந்தையின் மனைவியன்றோ?"

"என் தந்தையின் மனைவி, ஒரு மகனுக்குத் தாயானாள். அவன் எனக்குச் சகோதரன் முறை. அதே சமயத்தில் அவன் எனக்குப் பேரனும் ஆவான். ஏனெனில், அவன் என் பெண்ணின் மகனல்லனோ?".

"இங்ஙனமே என் மனைவி, எனக்குப் பாட்டி ஆயி னாள். எவ்வாறெனில், அவள் என் அன்னையின் அன்னை; நான் என் மனைவியின் கணவன்; அதே சமயத்தில் பேரன். ஒருவனுடைய பாட்டியின் கணவன் பாட்டன் ஆதலால், நானே எனக்குப் பாட்டன் ஆகின்றேன்".

சிவபிரானும் உமாதேவியும் :

இத்தகைய சுவைமிக்க 'உறவு முறைச் சிக்கற் புதிர்' ஒன்றைக் குமர குருபர அடிகள் தாமும், ஓரிடத்திற் குறிப்பிடு கின்றார். சிவபெருமானுக்கு உமாதேவியார் மனைவியாகத் திகழ் கின்றாள் என்றே நாம் பொதுவாக அறிவோம். ஆனால் குமர குருபரரோ, சிவபெருமானுக்கு உமையம்மை மனைவிமட்டும் அல்லள், பெற்றெடுத்த தாயாகவும் பிறங்குகின்றாள். அம்மட்டோ! தங்கையாகவும் திகழ்கின்றாள். இனி ஒருவகை யில் மகளாகவும் விளங்குகின்றாள் என்கின்றார்.

இது என்ன புதுமை? இங்ஙனமும் உண்டோ? என்று நாம் தயங்குகின்றோம். உறவு நிலை ஒன்றற்கொன்று முரண்பட்டு நிற்கின்றதே, இஃது எவ்வாறு பொருந்தும்? என்று எண்ணி, நாம் மனக்குழப்பமும் திகைப்பும் கொள்கின்றோம்.

குமரகுருபரர் விளக்கம்:

குமரகுருபரரோ, 'இதில் என்ன முரண்பாடு இருக்கின்றது. நான் உள்ளதைத் தானே கூறுகின்றேன். உண்மையைக் கூறினால் மனக்குழப்பம் எதற்கு? என வினவி, பின்வருமாறு தாம் புகன்று புதிரை விடுவிக்கின்றார்:

மனைவி:

"அருள் அது சத்தி ஆகும் அரன் தனக்கு" என்றபடி சிவபெருமான் தனது திருவருளையே சக்தியாகக்கொள்ளுகின்றார். திருவருள் ஆகிய சக்தியை ஒரு பெண்ணாக உருவகம் செய்து உரைத்தல் கவிதை மரபு. நாம் நம் கையினால் எல்லாத் தொழில்களையும் செய்கின்றோம்; அது போல, இறைவனும் தனது திருவருட் சத்தியாகிய நங்கையினால், ஆக்கல் அளித்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்கின்றான். "நம்கையினால் நாம் அனைத்தும் செய்தாற்போல், நாடு அனைத்தும் நங்கையினாற் செய்தளிப்பான் நாயகன்" என்பது திருக்களிற்றுப் படியார். இங்ஙனம், இறைவன் ஐந்தொழில் இயற்றுதற்குத் திருவருளாகிய சத்தியே, நங்கையாக அமைந்து நற்றுணை புரிதலின், உமாதேவி எனப்படும் அச்சத்தி, சிவபிரானுக்கு மனைவிமுறை ஆகின்றாள்.

மகள் தங்கை:

இம்மட்டோ? உலகத் தோற்றத்திற்கும் இயக்கத்திற்கும் அடிப்படையாக உள்ள நிலம் முதல் நாதம் ஈறாகிய முப்பத்தாறு தத்துவங்களும் தோன்றும் முறையை விளக்குங்கால், சிவ தத்துவத்தினின்று சக்தி தத்துவமும், சத்தி தத்துவத்தினின்று, சதாசிவ தத்துவமும் தோன்றுகின்றன என்று நூல்கள் கூறுகின்றன.

அதன்படி; சிவதத்துவத்தினின்று சத்தி தத்துவம் தோன்றுதலால் மகள் ஆகவும்; சிவதத்துவம் தோன்றியபின்னர்ச் சத்தி தத்துவம் தோன்றுதலால் தங்கையாகவும் சிவபிரானுக்கு உமாதேவி திகழ்கின்றாள்.

(தொடரும்)

தருமையாதீனத்துக்குச் சொந்தமான

திருச்சிராப்பள்ளி மௌன மடத்தில்

ஸ்ரீ மௌனகுரு, ஸ்ரீ தாயுமானசுவாமிகள் குருபூஜைவிழா

தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருச்சிராப்பள்ளி மௌன மடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணைப்படி மௌனகுரு தாயுமானவர் விழா 11—2—77 வெள்ளிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது.

குருபூஜை விழாவை முன்னிட்டு, திருச்சி மலைக்கோயில் ஸ்ரீ மாணிக்க விநாயகருக்கும், ஸ்ரீ உச்சிப்பிள்ளையாருக்கும். ஸ்ரீ மட்டுவார்குழலம்மை உடனுறை ஸ்ரீ தாயுமானசுவாமிக்கும், ஸ்ரீ மௌனகுரு, ஸ்ரீ தாயுமானவருக்கும் காலை 9 மணி அளவில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன.

மௌன மடத்தில் நண்பகல் 11 மணி அளவில் ஸ்ரீ மௌன குரு, ஸ்ரீ தாயுமானவர் திருவுருவப்படத்திற்கு விசேஷ அலங்கார ஆராதனைகளும் வழிபாடுகளும் நடைபெற்றன. மௌனமடம் கட்டளை விசாரணை, வித்துவான், ஸ்ரீமத். மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வழிபாடுநிகழ்த்தி அனைவர்க்கும் பிரசாதம் வழங்கினார்கள். நண்பகல் 12 மணி அளவில் மாகேசுவரபூசை நிகழ்வுற்றது.

மாலை 6 மணியளவில் மாவட்ட நீதிபதி திரு. C. P. சிங்காரம் பி. காம்., பி. எல்., அவர்கள் தொடங்கிவைக்க குருபூசை விழாச் சொற்பொழிவு நடைபெற்றது. திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரிப் பேராசிரியர், திரு. இரா. இராதாகிருஷ்ணன் எம். ஏ., அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்கள். தருமையாதீனப்பல்கலைக் கல்லூரி முதல்வர் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., பேராசிரியர்கள், வித்துவான். திருமதி. ப. நீலா எம்.ஏ. புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம்.ஏ., தருமையாதீன உயர் பள்ளித் தமிழாசிரியர், வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன், மாயூரம் பெண்கள் உயர்பள்ளித் தமிழாசிரியை, புலவர். செல்வி. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் உரையாற்றினர். வித்துவான். ஸ்ரீமத். மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நன்றியுரைகளைக்கூறி கூட்டத்தை உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

திருச்சிராப்பள்ளி மௌனகுரு வழிபாட்டுக் கழகத்தினரும், அருள்நெறித் திருக்கூட்டத்து அன்பர்களும், மற்றும் சைவ மெய்யன்பர் பலரும் விழாவில் கலந்துகொண்டு இன்புற்றனர்.

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பதும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பதும் நம் நாட்டில் வழங்கும்பழமொழிகள் மக்களைத்திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தி, சைவ - சமயப் பெருமைகளை அறியச்செய்து உய்விக்கவேண்டுமென்றபெருங்கருணையால் தருமையாதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது ஜன்ம நட்சத்திர மாகிய ஆயில்யத்திருநாளில் பாடல்பெற்றதலங்கள் தோறும் முறையான வழிபாட்டுக்கு வழிகாட்டி யருளியுள்ளார்கள். காவிரி வடகரைத் தலங்களில் வழிபாடு நடைபெறுகின்றன. உழவாரப்பணி, விசேட-அபிடேக ஆராதனைகள், தலத் திருப்பதிகங்களை அச்சிட்டு வழங்குதல் சமயப்பிரசாரங்கள் ஆயில்யத் திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

நள-பங்குனித்திங்கள் 18 ஆம்நாள் (31 - 3 - 77) வியாழக் கிழமை யன்று கீழ்க்கண்ட திருத்தலங்களில் வழிபாடு சிறப்புற நடைபெறும். பக்தர்கள் கலந்துகொண்டு பயன் பெறுவார்களாக.

1. **திருச்சேய்ஞலூரில்** காலை மணி 9-00 முதல் 11 வரை ஸ்ரீ சகிதேவியம்மை உடனுய ஸ்ரீ சத்தகிரீசுவரர் திருக்கோயி லில் அபிஷேக ஆராதனையும், வழிபாடும்.

2. **திருஆப்பாடியில்** பகல் மணி 11-30 முதல் 1-00வரை ஸ்ரீ பெரியநாயகியம்மை உடனுய ஸ்ரீ பாலுகந்தநாதர் திருக் கோயிலில் அபிடேக ஆராதனையும் வழிபாடும்.

3. **திருப்பனந்தாளில்** மாலை மணி5-00முதல் 7-00வரை. தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ பிருகந்நாயகி அம்மை உடனுய ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி திருக்கோயிலில் அபிடேக ஆராதனையும் வழிபாடும்.

இரவு 7-00 மணி முதல் சமய - விரிவுரை :-

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

வித்துவான் திரு. இரா செல்வக்கணபதி எம். ஏ.

அனைவரும் வருக ! வழிபட்டு உய்க ! கேட்டு நலம்பெறுக.

திருக்கோடிகா – திருமங்கலக்குடித்
தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான்,

திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

தேவாரத் திருப்பதிகங்களைப் பெற்று விளங்கும் திருக்கோயில்கள் பாடல்பெற்ற சிவதலங்கள் எனப்படும். இத்தகைய சிவாலயங்கள் 274 இந்நாடு முழுதும்பரவி விளங்குகின்றன. சோழவள நாட்டில் தேவாரப் பாடல்களைப் பெற்று விளங்கும் சிவதலங்கள் 190 உள்ளன. அவற்றுள் காவிரியின் வடகரைத் தலங்களாக விளங்குவன 63. அவற்றுள் திருக்கோடிகா, திருமங்கலக்குடி ஆகிய இரு தலங்களும் வடகரைத்தலங்களில் 37, 38 வது தலங்களாகத் திகழ்வனவாகும்.

திருக்கோடிகா மாயூரம் கும்பகோணம் இரயில் பாதையில் நரசிங்கன்பேட்டை ரயில் நிலையத்திற்கு வடக்கே 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. காவிரி வடகரைச் சாலையில் மாயூரமிருந்து கும்பகோணம் செல்லும் பெருவழியில் பேருந்துகள் மூலமாகவும் இத்தலத்தை அடையலாம்.

திருமங்கலக்குடி மாயூரம் கும்பகோணம் இரயில்பாதையில் ஆடுதுறை புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே திருப்பனந்தாள் செல்லும் பேருந்துச் சாலையில் 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து பேருந்துகள் வழியாகவும் இத்தலத்தை அடையலாம்.

திருக்கோடிகா

இத்தலம் பஞ்ச காக்களில் ஒன்று. சோலை எனப் பொருள்படும் கா என முடியும் ஐந்து சிறந்தசிவதலங்களைப் பஞ்சகாக்கள் எனக் கூறுவர். அவை, ஆனைக்கா, கோடிகா, கோலக்கா, நெல்லிக்கா, குரக்குக்கா, என்பனவாகும்.

திருக்கோடிகா என்பதை, திரி கோடி எனப் பிரித்து மூன்று கோடி தேவர்கள் வழிபட்ட தலம் என்றும், மூன்று கோடி மந்திர தேவதைகள் வழிபட்டு அருள்பெற்ற தலம் என்றும் மூன்றுகோடி தீர்த்தங்கள் வழிபட்ட தலம் எனவும் கூறுவர். ஊர்க்கோடியில் சோலைகளுக்கு இடையே விளங்கிய கோயில் எனவும் பொருள் கூறலாம். கோடிகா - கோடி காவுஎனத் தேவார திருப்பதிகங்களில் குறிக்கப்படுகிறது. ஐயனாரும் நாகமும் வழிபாடு செய்யப்படும் இடங்கள் காவு என மலையாள நாட்டில் வழங்கப்படுகின்றன. இத்தலத்தில் ஐயனார் சிறப்புடைய மூர்த்தியாவார். இவ்வூர்ப் பெயர் திருக்கோடிக்காவல் என வழங்கப்படுகிறது.

கோயிலமைப்பு :

பேருந்துச் சாலைக்கு மிக அண்மையிலுள்ளது திருக்கோயில். கிழக்கு நோக்கிய சந்நிதி. சந்நிதி வீதியின் வழியே இராஜகோபுரத்தை அடைகிறோம். கோயிலின் வடபால் முக்கோடி தீர்த்தம் விளங்குகின்றது. எல்லாத் தீர்த்தங்களும் இதில் நீராடி இறைவன் திருவருள் பெற்றுள்ள காரணத்தினால் இத் தீர்த்தத்திலே நீராடினோர் கங்கை யமுனை முதலான அனைத்துத் தீர்த்தங்களிலும் நீராடிய பயனை அடைவர். இராஜ கோபுரத்தின் உட்புறத்தில் எல்லாத் தீர்த்தங்களும் தேர்மீது இத்தீர்த்தத்தை நோக்கி வரும் காட்சிகள் கருங்கற் சிற்பங்களாக அமைந்து விளங்குகின்றன.

இராஜ கோபுரம் ஐந்து நிலைகளோடு அழகுறத் திகழ்கிறது. திருப்பணி செய்யப் பெறவேண்டிய திருக்கோயில் இது. இராஜ கோபுரத்தின் நுழை வாயிலில் வரிச் சிற்பங்கள் பலவும் காணப்படுகின்றன.

இராஜ கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் துவஜஸ்தம்பம் நந்தி பலிபீடங்கள் காணப்படுகின்றன. இரண்டாங் கோபுரத்திலிருந்து அம்பாள் சந்நிதி வரை கருங்கல்லில் மகாமண்டபம் அமைந்து விளங்குகின்றது. பெரிய பிராகாரம் உட்பிராகாரம் என இரண்டு திருச்சுற்றுக்களோடு அமைந்துள்ள இக்கோயிலின் இரண்டாங் கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்று உட்பிராகாரத்தை வலம் வருவோம். பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் கரையேற்று விநாயகர் வீற்றிருக்கின்றார். அகஸ்தியரால் மணலில் பிடித்து வைத்துப் பிரதிஷ்டை செய்யப்பட்ட

மூர்த்தி அது. கால வெள்ளத்தில் உருவம் கரைந்து போயிருக்கிறது. அதன் பழமையும் தூய்மையும் நம் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

மேற்குப் பிராகாரத்தில் சனீஸ்வரன் ஜேஷ்டாதேவி மாந்தி மாந்தாவுடன் உள்ள சிலை வடிவம் நம் கருத்தைக் கவர்கிறது. கருவறையின் புறச்சுவர்களில் உள்ள சப்த ரிஷிகளின் உருவங்கள் காணத்தக்கன. விநாயகர், அகத்தியர், துர்வாசர் உருவங்களும் உள்ளன. வடபுறம் கோஷ்ட பிரும்மாவைத் தவிர வேறொரு பிரும்மாவும் விளங்குகின்றார். நடராஜர் கற்சிலை வடிவில் காட்சி தருவது நம் கருத்தைப் பிணிக்கிறது. திருமாளிகைப்பத்தி மண்டபங்கள் மிக்க அழகுடையன.

மேற்குப் பிராகாரத்தில் முருகன் மற்றும் திருமகள் முதலிய தெய்வத் திருவுருவங்களும் உள்ளன. வடக்குப் பிராகாரத்தில் துர்க்கை சண்டேசர் சந்நிதிகள் உள்ளன.

இறைவன் சந்நிதிக்குச் செல்லும் மண்டபத்தின் இருபுறமும் சித்திரகுப்தனும் யமனும் இருக்கின்றார்கள். சித்திரகுப்தன் உலகில் உள்ள எல்லா உயிர்களும் செய்யும் நன்மை தீமைகளின் கணக்கினை எழுதுபவன். யமன் காலக்கடவுள். இத்தலத்து இறைவனை வழிபடுவோர்க்கு எமபயம் இல்லை எனவும், அவர்கள் சித்திரகுப்தனின் ஏட்டில் நல்லோர் வரிசையில் இடம் பெறுவர் எனவும் கூறப்படுகிறது. இதற்கேற்ப இவ்வூரில் ருத்ர பூமி இல்லையாம். இவ்வூரில் மரிப்பவர்களைக் காவிரியின் மறு கரையிலே எரிக்கும் வழக்கமே இன்றும் உளதாம்.

இறைவன் சந்நிதி நம் கருத்தைப் பிணிக்கிறது. கோடிகா ஈசுவரர் பன்னெடுங்காலமாய் வீற்றிருந்து அருளாளர் பலராலும் வழிபடப்பெற்ற மூர்த்தியாய் விளங்கி வருவதை நம் உள்ளம் எண்ணி நைகிறது.

" இன்று நன்று நாளை நன்று என்று நின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே "

என்று ஞானசம்பந்தர் அழகுறப் பாடியருளிய திருப்பாடல் நம் சிந்தனையில் இழையோட நாம் வழிபடுகிறோம்.

அம்பிகை திருக்கோயிலுக்கு வருகிறோம். இறைவியின் திருப்பெயர் வடிவம்மை. அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக அன்னை காட்சி தருகிறாள். ஸ்ரீ சக்கரமேரு போன்ற ஆவரணங்களோடும் கமலதளங்களோடும் அமைந்துள்ள கற்பீடத்தில் அன்னை ஞானம்பிகையாக விளங்குகின்றாள். இச்சந்நிதியிலேயே பாஸ்கரராயர் என்ற சக்திஉபாசகர் தமதுலலிதாசகஸ்ர நாம பாஷ்யத்தை அரங்கேற்றினார் எனக் கூறுகின்றனர்.

இறைவன் திருப்பெயர் கோடிகா ஈஸ்வரர். இறைவி திருப்பெயர் வடிவம்மை. திரிபுரசுந்தரி எனவும் வழங்கப் பெறுகிறார். தீர்த்தம் : சிருங்க தீர்த்தம். தலமரம் : பிரம்பு.

இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் பதிகம் மூன்றும் ஆக நான்கு பதிகங்கள் உள்ளன.

புராண வரலாறுகள் :

மூன்று கோடி தேவர்களும், மூன்றுகோடி மந்திர தேவதைகளும் இத்தலத்திறைவரை வழிபட்டு அருள் பெற்றதாக வரலாறு கூறுகிறது.

வைணவ குலத்தில் தோன்றிச் சிவமே பரம்பொருள் என்று கூறிச் சிவனடியாராக விளங்கிய ஹரதத்தர் இத்தலத்து இறைவனை வணங்கி அருள் பெற்றுள்ளார். நாடோறும் இவர் திருவாலங்காடு, திருவாவடுதுறை, தென்குரங்காடுதுறை, திருமங்கலக்குடி, திருமாந்துறை திருக்கோடிகா ஆகிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு கஞ்சனூருக்கு அர்த்தசாம வழிபாட்டிற்கு வருவதுவழக்கம். ஒரு நாள் பெருமழைபெய்தபோது திருக்கோடிகாவிலிருந்து கஞ்சனூர் செல்ல இயலாமல் வருந்திய ஹரதத்தரை ஒரு ஏழை அரிஜனன் கஞ்சனூருக்குத் தான் துணையாயிருந்து அழைத்துச் சென்றான். கஞ்சனூரில் அர்த்தயாம வழிபாட்டை இனிதாக முடித்த ஹரதத்தர் கோயிலில் தனக்குப் பிரசாதமாகக் கிடைத்த அன்னத்தையும் சுண்டலையும் அவ்வரிஜனனுக்கு வழங்கினார். மறுநாள் அவர் வழங்கிய அன்னமும் சுண்டலும் திருக்கோடிகா இறைவர் சந்நிதியில் காணப்பட்டன. கோடிகா ஈஸ்வரரே ஹரதத்தருக்கு வழித்துணையாகச் சென்றவர் என்பதை அறிந்து ஹரதத்தர் வியந்து மகிழ்ந்தார் எனக் கூறப்படுகிறது.

இங்குள்ள அம்பிகை, ஆழ்வார்களுக்கு வேங்கடாசல பதியாகக் காட்சி வழங்கியவர். ஆழ்வார்கள் வேங்கட நாதரைத் தரிசிக்கத் திருவேங்கடம் சென்றபோது இறைவன் அவர்களுக்கு அங்குக் காட்சிதரவில்லையாம். திருக்கோடிகாவில் திரிபுரசுந்தரியைச் சென்று தரிசனம் செய்யும்படி அசரீரிபிறந்ததாம். ஆழ்வார்கள் அவ்வாணைப் படியே இத்தலத்தை அடைந்தனர். ஊரை நெருங்கிய போது காவிரியில் வெள்ளம் கரைபுரண்டோடியது. ஆழ்வார்கள் கரைசேர முடியாமல் வருந்தினர். அகத்தியர் அவர்கள்முன் தோன்றி கரையேற்று விநாயகரைப் பிரார்த் தனை செய்துகொள்ளுமாறு கூறினர். அவர்களும் அவ்வாறே பிரார்த்தனை செய்தனர். வெள்ளம் குறைந்தது. கரையேறிய ஆழ்வார்களுக்கு அன்னை திரிபுரசுந்தரி திருவேங்கட நாதராகக் காட்சி தந்தருளினர்.

கல்வெட்டுகள் :

இத்திருக்கோயிலில் முற்காலத்துப் பல்லவர்களில் (The Early Pallavas) நந்திபோத்தரையன் விஜய நிருப துங்க விக்கிரமவர்மன் என்பவர்களுடைய கல்வெட்டுக்களும் பிற்காலப் பல்லவரில் (The Later Pallavas) கோப்பெருஞ் சிங்கதேவர் காலத்துக் கல்வெட்டுக்களும், முத்தரையர்களில் இளங்கோமுத்தரையர் காலத்துக் கட்வெட்டும், பாண்டியர் களில் மாறன் சடையன் காலத்துக் கல்வெட்டும், சோழ மன்னர்களில் மதுரைகொண்ட கோப்பரகேசரிவர்வன் முதலாம் இராசராசசோழன் முதற் குலோத்துங்கன் விக்கிரமசோழன் மூன்றுங் குலோத்துங்கன் என்பவர் களுடைய கல்வெட்டுக்களும் ஆக ஐம்பது கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இத்திருக்கோயில், திருவிசைப்பாப் பதிகம் பாடிய கண்டராதித்த சோழதேவரது மனைவியாராகிய செம்பி யன்மாதேவியாரால் கற்றளியால் ஆக்கப்பெற்ற பெருஞ் சிறப்புடையது. இவ்வம்மையார் இக்கோயிலைக் கட்டு வதற்கு முன்பு இங்கிருந்த இருபத்தாறு கல்வெட்டுக்களைப் பெரிதும் பாதுகாத்து அவைகளை எல்லாம் தாம் கட்டிய கோயிலில் செதுக்கிவைக்கச் செய்தனர். கல்வெட்டில் இவ்வம்மையார் வைத்திருந்த பற்று பாராட்டற்குரியது. இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருக் கோடி காவல்பெருமாள், திருக்கோடிகாவில் மகாதேவர்,

திருக்கோடிகாவுடையார் என்னும் பெயர்களால் கூறப் பெற்றுள்ளார். இக்கோயில் திருச்சுற்று மாளிகை விக்கிரம சோழதேவரால் கட்டப்பெற்றதாகும். அதில் விக்கிரம சோழன் திருமாளிகை என எழுதப்பெற்றுள்ளது. சண்டேசுவர நாயனுர் கோயில் உத்தரத்தில் தியாக சமுத் திரம் என்று செதுக்கப்பெற்றுள்ளது. அதனுல் அக்கோயில் தியாக சமுத்திரம் என்னும் சிறப்புப் பெயருடைய சோழ மன்னனுல் கட்டப்பெற்றது என்று அறியக்கிடக்கின்றது. இத்திருக்கோயிலில் திருப்பெருந்துறை ஆளுடையாரையும் கோப்பெருஞ்சிங்கதேவரையும் எழுந்தருளுவித்தவர் கங்கை கொண்டசோழபுரத்து மணவூருடையார் வரந்தரும் கூத்தப்பெருமாள் ஆவர்.

இவ்வூர் முதலாம் இராசராசன் காலத்தில் (ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டு) வடகரை நல்லாற்றூர் நாட்டுத் திருக்கோடிகாவல்எனவும், கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் விருதராசபயங்கர வளநாட்டு நல்லாற்றூர் நாட்டுத் திருக்கோடிகா எனவும் கூறப்பெற்றுள்ளது.

நந்திபோத்தரையர் என்னும் முற்காலப் பல்லவர் கல்வெட்டினுல் இக்கோயிலினுள் சிறுநங்கை ஈச்சரம் என்னும் பெயருள்ள கோயில் ஒன்று கூறப்பெற்றுள்ளது. திருக்கோடிகாவிற்குக் கண்ணமங்கலம் என்னும் வேறு பெயருண்மையை 'திருக்கோடிகாவாகியகண்ணமங்கலத்து' என்னும் கல்வெட்டுப்பகுதி அறிவிக்கின்றது.

சிறுநங்கை ஈஸ்வரகாரத்து மகாதேவர்க்குத் திரு விளக்கினுக்கு ஆழிசிறியன் என்பவன் நூறுகலம் நெல் கொடுத்து அதன் வட்டிகொண்டு நாள்வாய் (நாள் தோறும்) உழக்கு நெய்யால் அவ்விளக்கை எரிப்பதற்கு நிவந்தம் அளித்துள்ளான். இது நந்தி போத்தரையன் 19-ஆம் ஆண்டுக் கல்வெட்டால் புலப்படுகின்றது. விசைய நிருபதுங்க விக்கிரமவர்வனின் இருபத்துநான்காம் ஆண்டில், கொண்டநாடுடைய வெட்டுவதி அரையனுன மல்லன் வேங்கடவன், பதினைந்து கழஞ்சு பொன்னை அளித்து, அதன் வட்டிகொண்டு நொந்தாவிளக்கு ஒன்றைத் திருக்கோடிகா மகாதேவர் கோயிலில் எரிப்பதற் காக நாணக்கச் சதுர்வேதிமங்கலத்துச் சபையாரிடம் ஏற்பாடு செய்திருந்தான். நிருபதுங்க மகாராஜர் தேவியார் வீரமகாதேவியார், இரணிய கர்ப்பமும் துலாபாரமும் புகுந்தபொன்னில் திருக்கோடிகா மகாதேவர்க்கு ஐம்பதின்

கழஞ்சு பொன்னை அளித்து, அவற்றில் இருபத்தைந்து கழஞ்சு பொன்னுக்கு வரும் வட்டிகொண்டு நாடோறும் இருநாழி அரிசியும் ஒருபிடி நெய்யும் திருவமுதுக்கும், நாடோறும் உழக்கு நெய்கொண்டு ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்கும் ஏற்பாடுசெய்திருந்தார். மெழுக்குப் புறத் துக்கு நிலம் விடப்பட்டிருந்தது. வடகரை நல்லாற்றூர் நாட்டு, ஆரூர் உடையான் அருளாக்கி சேந்தன் இந் நாட்டுக் கண்ணமங்கலத்துப் புதுவாய்க்காலின் வடக்கே மூன்றுமாவும், வடகரை அரைமாவும் ஆக மும்மாவரை நிலத்தை, பெண்ணடியார்கள் உண்பதற்கும், ஒருகூறு ஆணடியார்கள் உண்பதற்கும் ஆக ஏற்பாடுசெய்திருந் தான். மல்லிநாட்டுக்கிழத்தி பெரும்பிடுகுவிஞ்சவயனுன நக்கன் நந்தவனத்துக்கும், நந்தவனம் இறைப்பார்க்கும் ஆக இரண்டுமா நிலத்தை விலைக்கு வாங்கிக் கொடுத் துள்ளான். நந்தவனம் திருக்கோவிலுக்கு வடபாலுள்ள இடமாகும்.

பழையாற்று நந்திபுரத்து வியாபாரி குமரன் கணபதி என்பான் திருக்கோடிகா மகாதேவர்க்குத் திருவிளக்கினுக் கும், திருவமிர்தினுக்கும் ஆக எழுபதின் கழஞ்சு பொன் கொடுத்துள்ளான்.

மார்கழித் திருவாதிரைச் சிறப்புக்குக் கூத்தாடும்நாயனு ருக்கு உதையஞ்சடையான் உடையான் தில்லையம்பல விழுப் பரையன் மூன்ருங்குலோத்துங்கன் காலத்தில் நிவந்தம் அளித்துள்ளான். பரகேசரி விக்கிரமசோழன் காலத்தில் தென்கரை உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுத் திருவாவடுதுறை கோயிலில் பத்து தபசிகள் உண்பதற்கு ஒருவேலியும், வைத்திய விருத்திக்காக அரை வேலியும் திருக்கோடிகாவில் கொடுக்கப்பெற்றிருந்தது.

அமாவாசையில் இறைவரை எழுந்தருளச்செய்வதற்கு விக்கிரமசோழதேவரின் நான்காம் ஆண்டில் நிவந்தம் கொடுக்கப்பெற்றுள்ளது. வரகுணமகாராஜபாண்டியன் சரஸ்வதி, கணபதி இவர்கள் கோயில்களில் விளக்கு எரிக்க நிபந்தம் அளித்துள்ளான்.

கோபுரத்தின்வாசல் இடது பக்கத்தில் புதுவைபுரி பின்னைப்பெருமாள் மகனுர் சடையரைப்பற்றிப் பாடல்கள் இருக்கின்றன.

See the Annual report on south Indian Epigraphy for the year 1931. Inscription Nomber 9—58.

South Indian Inscription Vol. 13. Inscription general Numbers 55, 74. 78, 136, 222.

திருமங்கலக்குடி

ஐந்து வகை மங்கலங்கள் சேர்ந்த அழகிய தலம் திருமங்கலக்குடி. ஊர் - மங்கலக்குடி. தீர்த்தம் - மங்கல தீர்த்தம். விநாயகர் - மங்கல விநாயகர். அம்பாள் பெயர் - மங்கலநாயகி. விமானம் - மங்கல விமானம். நவக்கிரகங்களும் தனிக்கோயில்கொண்டு விளங்கும் சூரியனார்கோயில் இத்தலத்திற்கு அண்மையில் உள்ளது.

கோயிலமைப்பு :

கிழக்கு நோக்கிய கோயில். ஐந்து நிலைக் கோபுரம் கோயிலுக்கு அணி செய்கிறது. கோபுர வாயிலுக்கு அருகில் மங்கல தீர்த்தம் உள்ளது. இராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்ருல் துவஜஸ்தம்பம், நந்தி, பலிபீடங்களுடன் மகாமண்டபம் தோன்றுகிறது. மகாமண்டபத்தின் வடபால் தெற்குநோக்கி அம்பாள் சந்நிதி உள்ளது.

இரண்டு பிராகாரங்கள் உள்ளன. இரண்டாங் கட்டைக் கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் அர்த்த மண்டபத்தை அடைகிருேம். உட்பிராகாரத்தில் விநாயகர் முருகன் கஜலக்ஷ்மி முதலிய திருவுருவங்கள் உள்ளன. விமானக் கருவறைக் கோட்டங்களில் தக்ஷிணுமூர்த்தி, இலிங்கோற்பவர், பிர்மா, துர்க்கை உருவங்கள் உள்ளன. தலமரம் கோங்கிலவு, வடக்குப் பிராகாரத்தில் இருக்கிறது.

சுவாமி சந்நிதி மிக்க கவர்ச்சியோடும் பொலிவோடும் திகழ்கிறது. காளி, சூரியன், திருமால், பிரமன், அகத்தியர் முதலியோர் வழிபட்டு அருள்பெற்றதைத் திருநாவுக்கரசர் தேவாரத் திருப்பாடல் ஒன்றில் அருளிச் செய்கின்ருர்.

"மங்க லக்குடி ஈசனை மாகாளி
வெங்கதிர்ச் செல்வன் விண்ணொடு மண்ணும் நேர்
சங்கு சக்கர தாரி சதுர்முகன்
அங்கு அகத்தியனும் அர்ச்சித்தாரன்றே"

என்ற பாடலை நம்மனத்தால் நினைந்து ஓதி வழிபடுகின்றோம். இக்கோயிலில் உள்ள திருவிழாவிற்குரிய வாகனங்களில் புருஷாமிருக வாகனம் பார்த்தற்குரியது.

அம்பாள் சந்நிதியில் தல புராண வரலாறுகள் ஓவியங்களாகக் குறிக்கப் பெற்றுள்ளன.

இறைவன் திருப்பெயர் புராணேசுவரர். இத்திருப்பெயர் இவ்வூர்ப் பதிகத்தின் முதற்பாடலில்,

"நீரின் மாமுனி வன்னெடுங் கைகொடு நீர்தனைப்
பூரித்தாட்டி அர்ச்சிக்க இருந்தபுராணனே"

என ஞானசம்பந்தரால் எடுத்தாளப் பெற்றுள்ளது. இறைவி திருப்பெயர் மங்கள நாயகி. தீர்த்தம் – மங்கள தீர்த்தம்; காவிரி. தலமரம் – கோங்கிலவு.

இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, அப்பர் பதிகம் ஒன்று ஆக இரண்டு பதிகங்கள் உள்ளன.

புராண வரலாறுகள் :

காளி, சூரியன், திருமால், பிரமன், அகத்தியர் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற வரலாறு தேவாரப் பாடலில் குறிக்கப் பெற்றுள்ளது.

இத்தலத்தில் வாழ்ந்த முனிவர்ஒருவர் சிவபூசைக்குரிய திருமஞ்சன நீரை அமர்ந்தவண்ணமே திருக்கைகளை நீட்டி ஆற்று நீரை முகந்து அபிடேகம் புரிந்தார் என்னும் இத்தல வரலாற்றுச் செய்தியைத் திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகத்தின் முதல் திருப்பாடல் குறிப்பிடுகிறது.

இத்திருக்கோயில் திருப்பணி சோழமன்னனின் தண்டலாளர் ஒருவரால் செய்விக்கப் பெற்றுள்ளது. இத்திருக்கோயில் திருப்பணிபற்றி, செவிவழிச்செய்தி ஒன்று பின் வருமாறு வழங்கப்பெறுகிறது.

சோழ மன்னனிடம் வரிவசூல் செய்யும் தண்டலாளர் ஒருவர் மங்கலக்குடி ஈசர்பால் மாறாத அன்புடைய சிவனடியார். வரியாக வசூலித்த பணத்தைக்கொண்டு கோயில் திருப்பணிகளைச் செய்துமுடித்தார். அரசன் வரிப்பணத் தொகையைக் கேட்டபோது அரச ஆணைக்கு அஞ்சித் தானே உயிர் துறந்தார். அவருடைய மனைவியார் புராணேசுவரரையும் மங்களநாயகியையும் வழிபட்டுக் கணவர் உயிரை மீட்டாள். அது முதல் இவ்வம்பிகை தன்னை வழிபடும் மங்கையர்களுக்கு மங்கலங் காக்கும் மங்கல நாயகியாகப் போற்றப்பெற்று வழிபடப்பெறுகிறார்.

கல்வெட்டு :

இக்கோயிலில் ஆறு கல்வெட்டுக்கள் படியெடுக்கப் பட்டுள்ளன. அவையாவன :— சோழர் 1. பல்லவர் 1. விஜயநகரத்தரசன் 1. மற்றையவற்றிற்குப் பெயரில்லை.

சோழர்களில் ராஜராஜன் 24 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் முந்திய ஆண்டில் பஞ்சம் ஏற்பட்டதால் கோயில் சொத்தைச் சூறையாடிய சிலரிடம் நீதிபதிகள் பரிகாரங் கேட்டதை அறிகிறோம்.

பல்லவன் கோப்பெருஞ்சிங்கன் 25 ஆம் ஆண்டில் இக் கோயிலுக்கு, பெருமங்கலம் தொண்டைமான் நிலம்வாங்கித் தருமம் செய்தான். கிருஷ்ணதேவராயர் 1439 சகம் ஆண்டில் கோயில்களுக்கு வரி தள்ளுபடி செய்தார். சுங்கந் தவிர்த்த குலோத்துங்கன் தனது 16 ஆம் ஆண்டில் சில வரிகள் விதித்து கோயிலுக்கு அவைகளை அளித்தான்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanatheeswaraswamy Devasthanam, Thiruvaiyaru.

D. K. Oza I. A. S.

Was happy to visit this place of happy antiquity.

(Sd.) D. K. O.

23—12—76. Director of Employment.

சிவமூர்த்தங்கள்

"நஜன்"

(மலர் 36, இதழ் 3, பக்கம் 112 இன் தொடர்ச்சி)

இப்பன்னிரண்டு தலங்களில் வடகோடியில் இமாலயச் சாரலில் இருப்பது கேதாரம். தென்கோடியில் வங்கக் கடலில் தீவாக உள்ளது இராமேஸ்வரம். இராமேஸ்வரம் ஒரு இடத்தைத் தவிர மற்ற 11 இடங்களிலும் பக்தர்களே இலிங்கத்தைத்தொட்டு பூஜிக்கலாம். இப்பன்னிரண்டில் கேதாரம், ஸ்ரீசைலம், இராமேஸ்வரம் இம்மூன்றும் சமயாசாரியர்களால் பாடப்பெற்றவை. காசி வைப்புத் தலமாக க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் 'வாரணாசி' என்று குறிக்கப்படுகிறது.

இப்பன்னிரண்டு தலங்களில் இராமேஸ்வரம் தமிழ்நாட்டிலுள்ளது. ஸ்ரீசைலம் ஆந்திராவிலுள்ளது. குஜராத்தில் சோமநாதம் உள்ளது. மத்யப்பிரதேசத்தில் உஜ்ஜைனியும் ஓங்காரமும் உள்ளன. உத்தரப்பிரதேசத்தில் கேதாரமும் வாரணாசியும் உள்ளன. மற்ற நான்கான பரலிவைத்யநாதம், நாகேசம், திரியம்பகம், குஸ்ருமேசம் ஆகியவை மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ளன. இந்த ஜோதிர் லிங்கங்களைப் பற்றிய சுலோகம் வருமாறு.

ஸௌராஷ்ட்ரே சோமநாதம் ச ஸ்ரீ சைலே மல்லிகார்ஜுனம்
உஜ்ஜைன்யாம் மகாகாளம் ஓங்காரம் மமலேஸ்வரம் ॥
பரல்யாம் வைத்யநாதம் ச டாகின்யாம் பீம்சங்கரம்
சேதுபந்தே ச ராமேசம் நாகேசம் தாருகாவனே ॥
வாரணஸ்யாம்து விஸ்வேசம் கௌதமீதீரம் திரியம்பகே
ஹிமாலயேது கேதாரம் குஸ்ருமேசம் சசிவாலயே. ॥

இமயத்தின் சிகரத்தில் கயிலாயம் உள்ளது. மலையைத் தரிசிக்கலாமேயொழிய யாரும் அங்குப் போகமுடியாது. கிரிப் பிரதக்ஷிணமும் செய்யலாம்.

சோமநாதம் :- ரிக்வேதத்தில் சில ரிக்குகளில் இத்தலம்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. கஜினி முகம்மது 17 முறை படை எடுத்து அழித்த இக்கோவிலை, சர்தார் வல்லபாய்படேல் பெரு முயற்சிசெய்து மீண்டும் கட்டினார். கிருஷ்ணபரமாத்மா வேடனால் அடிபட்டுத் தேகவியோகமான இடம் இதுவே. ஆலயம் கோட்டை ரூபமாக அமைந்துள்ளது. அது இருக்கும் இடம் பிரகாசப்பட்டினம் எனப்படும். வெளிக்குத் தெரியும்படி ஒரு லிங்கம் காணப்பட்டாலும் பூமிக்கு அடியில் மறைவாக உள்ள சிறிய லிங்கமே சுயம்பு லிங்கம்.

ஸ்ரீசைலம் :- மருதமரம் தல விருக்ஷம். அம்பாசமுத்திரத்திற் கருகிலுள்ள திருப்புடைமருதூர் (புடார்ச்சனம்) திருஇடைமருதூர் (மத்யார்ச்சுனம்) ஸ்ரீசைலம் (மல்லிகார்ஜுனம்) இம்மூன்றும் அர்ச்சுனக்ஷேத்திரங்கள். இங்கு திருநந்திதேவரே மலையாகி சிவ பெருமானைத் தாங்கிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதைப் பூலோகக் கைலாசம் என்றும் அழைக்கிறார்கள்.

உஜ்ஜைனி :- இங்குக் கோவில்கொண்டுள்ளவர் மகாகாளர். இக்கோவிலின் குளத்தின் நீர் அடிக்கடி மாறுகிறது. சோமநா தத்திலுள்ளதுபோலவே இங்கும் இரண்டு லிங்கங்கள் உண்டு.

ஓங்காரம் :- இந்த ஆலயம் நர்மதை நதிக்கரையில் உள்ளது. பாணாசுரன் பூஜை செய்து விஸர்ஜனம் செய்த லிங்கங்களே இதில் கிடைக்கும் பாண லிங்கங்கள்.

வைத்தியநாதம் : பைரவர் உட்கார்ந்த நிலையில் பெரிய உரு வில் காணப்படுகிறார். இராவணன் ஆத்மலிங்கத்தைக்கொண்டு வந்தபோது ஒரு பாதி இங்கும் ஒருபாதி கோகர்ணத்திலும் விழுந்ததாகக் கூறப்படுகிறது. (திருக்கோகர்ணம் ஜ்யோதி லிங்கத் தலமல்ல.)

பீமசங்கரம் :- இங்குள்ள லிங்கம் ஒரு முழ நீளமுள்ளது.

இராமேஸ்வரம் :- ஜோதிர்லிங்கத் தலங்களில் மிகப் பிரசித்த மானது இராமேஸ்வரம். இங்கு சமுத்திரஸ்நானம் விசேஷம். இங்கு அர்த்தஜாம பூஜையும் மிக விசேஷமானது.

நாகேசம் :- ஔண்டா என்ற இடத்தில் இதன் ஆலயம் உள்ளது. மிகப் பழமையான ஆலயம். மூலஸ்தானம் மிகத் தாழ்வானது; நிமிர்ந்துநிற்கமுடியாது. தாருகாவனம் என்பது

இதுதான். கோமுகம் கிழக்குநோக்கியுள்ளது. இப்படி இருப்பது மிக அரிது.

காசிக்கு வாரணாசி என்றும் மகாமயானம் என்றும் பெயர்கள் உண்டு. காசித்தலமே சிவனது சூல வடிவில் அமைந்துள்ளது.

க்ஷேத்திர விசேஷமாக விசுவேசுவரம், பிந்துமாதவம், அமிர்தேஸ்வரம், ரத்னேசுவரம், விருத்தகாலேசுவரம். சித்ராங்கதேஸ்வரம், நீலகண்டேஸ்வரம், ஹரம்பாபேசுவரம் போன்ற பல பெருந் தலங்களும் காசியில் உள்ளன. இத் தலத்தில் பல சிவாலயங்கள் இருந்தாலும் தலநாயகர் விசுவநாதர்தான். இங்கு 36 லிங்கங்கள் பெருமை மிக்கவை.

திரியம்பகம் :- நாஸிக் என்ற பஞ்சவடிக்கருகிலுள்ளது. திரியம்பகம். பாண கங்காநதி திரியம்பகத்தின் கிழக்கு எல்லை. இங்குள்ள லிங்கம் கோலக்கல்லால் ஆனது.

கேதாரம் :- இமயத்தையொட்டியது. ருத்திரப்பிரயாகையிலிருந்து 48 மைல் நடந்தே செல்லவேண்டும். ஆண்டுதோறும் ஆறுமாத காலம் பனியால் மூடப்பட்டிருக்கும்.

இப்பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களையும் ஒரே இடத்தில் கண்டு தரிசிக்க விரும்பினால் இராமேஸ்வரம் (அக்னி தீர்த்தக்) கடற்கரையில் சிங்கார மண்டபத்தில் கடலைப் பார்த்து இப் பன்னிரண்டு சந்நிதிகளும் சிறிய அளவில் பக்கத்திற்கு ஆறாக இருபக்கங்களிலும் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

(தொடரும்)

தெய்வீகச் செய்தி

பக்தி எதுவரை செல்லும்

ஞானம் ஆண் மகன் ஒருவனைப் போன்றது. பக்தி பெண்மணி யொருத்தியைப் போன்றது. கடவுளுடைய இல்லத்தின் நுழைவுப் பகுதியில் உள்ள அதிதி விடுதி வரையிலும் செல்லத்தான் ஞானத்திற்கு அதிகாரமுண்டு. ஆனால் ஆண்டவனுடைய அந்தப்புரப் பகுதிகளுக்கு பக்தியானது செல்லக்கூடும்.

ஆதாரம்:- ஸ்ரீராமகிருஷ்ணரின் ஞான முரசு — சாது

நன்றி, —சுதேசமித்திரன். 23,24-2-77

கட்டுரை எண் - 2.

சகலாகமசார சங்கிரகம்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்,

மகாவித்துவான். திரு. ச. தண்டபாணிதேசிகர்

(மலர் 36, இதழ் 3, பக்கம் 104 இன் தொடர்ச்சி)

சௌசம் :

வேறு யாரும் உபயோகிக்காத புல்லால் குதத்தைத்துடைக்க. ஓட்டாஞ் சல்லியாலாவது, மண்ணாலாவது, வலக்கையால் துடைக்க.

— ஞானரத்நாவளி

தூய நீரை யடைந்து, கையில் தேங்காயளவு மண்ணெடுத்துப்போய்ச் சௌசம் செய்க. — காலோத்திரம்.

புண்ய தீர்த்தங்களால் சௌசம் செய்தல் கூடாது; செம்பிலாவது, கலயங்களிலாவது எடுத்துக்கொண்டுபோன நீரால் சௌசம் செய்க. — காலோத்திரம்.

நீரில் இறங்கிச்சௌசம்செய்தல் ஆகவே ஆகாது. கலசத்தில் முகந்த தண்ணீரால் சிறிது சிறிதாக விட்டுச் சௌசம் செய்க. இலந்தைக்கொட்டையளவான மண்ணால் ஒரு முறை கோதண்டத்தையும், ஐந்து தடவை குதமுதலிய எல்லா அங்கங்களையும் இடது கையைப் பத்துத்தடவையும், இருகைகளையும் சேர்த்து ஏழு முறையும், இரு கால்களையும் இருபத்தொரு தடவையும் இல்லறத்தான் சௌசம் செய்க. — பாத்ம புராணம்.

அத்வனிஸ்மிருதம் :

இல்லறத்தார்க்கு இங்ஙனம் சொல்லப்பட்டது. இது போல இருமடங்கு பிரமசாரிகளுக்கும், மூன்று மடங்கு வானப் பிரஸ்தர்களுக்கும், நான்கு மடங்கு துறவிகட்கும் சௌசம் செய்யும் முறை விதிக்கப்பட்டுள்ளது. எவ்வளவு சௌசஞ் செய்யின் மனத்தூய்மை யுண்டாகுமோ அவ்வளவு முறை செய்க.

பின்னர், குறித்த சில நாட்களில் சௌசசித்தியின்பொருட்டும் சில விதிகள் கூறப்படுகின்றன. பிணியாளன் முற்கூறியதில் அரையளவு செய்தாற்போதும்.

சௌசம் செய்தபின் மண்ணாவது நீராவது மிஞ்சி இருக்குமானால் அவையனைத்தையும் அவனுடைய பிதிரு தேவதைகள் உண்பார்கள். ஐயமில்லை. அதனால் எப்படியும் காலலம்பிய மிச்சமாக நீரையும் மண்ணையும் வைக்கக்கூடாது.

எவன் சௌசம் ஆசாரம் இல்லாதவனோ அவன் செய்யும் கிரியைகள் அனைத்தும் பயனற்றன ஆகின்றன. ஆசாரத்தால் ஞானத்தையும், தனத்தையும், அனைத்தையும் அடைகிறான். ஏன் வீடுபேற்றையும் அடைகிறான்.

ஆற்றங்கரை, கோயில், புற்றடி, எலிதோண்டிய இடம், வழிநடை பிற தூய்மையற்ற இடங்கள் இவற்றிலிருந்து சௌசத்திற்கு மண் எடுக்கவே கூடாது. குளம், கிணறு, தடாகங்கள் தூய்மையான சோலைகள் இவைகளிலிருந்து மண்ணை எடுக்கலாம். ஏனைய இடங்களில் எடுத்தலாகாது.

எடுத்துக்கொண்டுவந்த மண்ணை சௌசத்திற்கும், ஸ்நானத்திற்குமாக இருபகுதியாகப் பிரிக்க. பின்னர் நீரால் பதினறு தடவை வாய்கொப்பளிக்க. இங்ஙனம் சௌசவிதி சிறப்பாகக் கூறப்பட்டது. இனி ஆசமன விதிகூறப்பெறும்.

ஆசமனம் :

பூமியில் வலது காலையும், நீரில் இடது காலையும் வைத்துக்கொண்டு, விண்ணையும் நதியையும் நன்றாகப்பார்த்து, கையைப் பசுவின் காதுபோல அமைத்துக்கொண்டு, உழுந்து அமிழக்கூடிய அளவுள்ள நீரை ஓசையில்லாமல் குடிக்கவேண்டும். அதற்குக் குறைவாகவோ கூடவோ குடித்தால் அது கள் குடித்ததுபோலாகும். இங்ஙனம் முறைப்படி ஆசமனம் செய்து பின்னர் பல் துலக்கத்தொடங்குக.

பல் துலக்கும் விதி :

ஈரமுள்ளதும், ஒழுங்காகச் சமமாக வெட்டப்பட்டதும், இயல்பாகவே தூயதும் கணுவில்லாததும் சுண்டுவிரற் பருமன் உள்ளதும் ஆகிய பற்கொம்பே பல்துலக்க ஏற்றது எனக் கூறப்பட்டுள்ளது.

வில்வம், கொக்கிறகு, வாகை, கருங்காலி, மருது இவைகளின் கொம்புகள் எட்டங்குலம் துறவிக்கு உரியது. போகிகட்குக் கூறுகிறேன் நாவல், மா, மருது, அசோகு, விளா, மகிழ் இவைகளில் உண்டானதும், செங்கரும்பின் கொழுந்தும், சாதி சண்பகம், சங்கம், தினிசு, கடம்பு இவற்றின் கொம்பும், வேம்பு மருது இவற்ருலும் பல்துலக்க வேண்டும். முள் உள்ளதும் பாலுள்ளதுமான மரங்களின் கொம்பு பன்னிரண்டு அங்குல நீளம் இருத்தல் வேண்டும். — காரணுகமம்.

அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் இவர்கட்குப் பன்னிரண்டங்குலத்தில் தொடங்கி முறையாக ஒவ்வொரு அங்குலம் குறைவாகவும், பெண்கட்கு நாலங்குலமும் பற்கொம்பு கொள்ளுக. பல்துலக்கும்போதும், மலசலம் கழிக்கும் போதும், சௌசம், ஸ்நானம், ஜபம், அர்ச்சனே, போஜனம், பிச்சை இவைகளைச் செய்யும்போதும் வாய்பேசாமல் மௌனத்தை மேற்கொள்ள வேண்டும். — கிரியாகாண்ட கிரமாவலியில்.

சிவதருமிணிகட்கு எட்டங்குலமும், சாதகர்களுக்குப் பதினெரு அங்குலமும், லோகதர்மிகளான சூத்திரர்கட்கு ஒவ்வோரங்குலம் குறைவாகவும் பற்கொம்பைக்கொள்க. துறவியும் மௌனியும் வடக்கு நோக்கியும், இல்லறத்தான் கிழக்கு நோக்கியும் தூய இடத்திலிருந்து, ... நாய், பிணியுற்ருேன், பெண், நாய் கவ்விய எலும்புத்துண்டு பன்றி இவற்றைப் பாராமலிருக்கக்கடவன். இருதய மந்திரத்தால் மந்திரிக்கப்பட்ட குச்சியால், பல்லின் ஈறில் காயமுண்டாகாவண்ணம், பல் நன்ருக அழுக்குப்போம்வரையில் துலக்குக.

சாம்பர், கொக்கினிறகு, தேங்காய்நார் முதலியவற்ருலும், புல், இலே, புரசிலே, செங்கற்பொடி, விபூதி, கைவிரல், நெற்பயிர், பட்சிகளின் இறகு இவற்ருல் பல்தேய்க்கலாகாது,

சூரிய உதயத்திற்குப்பின் பல் தேய்ப்பின் மந்திரங்களும், முனிவர்களும், தேவர்களும், பிதிரர்களும் பாராமுகமாகின்றனர்.

ஒவ்வொருபருவத்திலும், சஷ்டியிலும், நவமியிலும், ஏகாதசியிலும், குச்சிகள்கொண்டு பல் துலக்கினுல் ஏழுதலைமுறைவரை குலம் அழியும்.

அட்டமியிலும் சதுர்த்தசியிலும் பதினைந்தா நாளாகிய பஞ்சாதசியிலும், எண்ணெய் ஊன் விற்றலேயும், பற்குச்சிக்கொண்டு பல்தேய்த்தலேயும் விடுக.

பருவம் அமாவாசை சங்கிராந்தி கிரகணம் இவைகளில் பாவனையாகவாவது தழைகளைக்கொண்டாவது போககாமிகள் பல்துலக்க. பற்குச்சி கிடைக்கவில்லையாயினும், விலக்கப்பட்ட தினங்களிலும், பன்னிரண்டுமுறை வாய் கொப்புளிக்க. அதனால் வாய் தூய்மையாகும். — ஞானரத்னவளியில்.

மல மூத்திரங்கள் வாயிற் பட்டுவிட்டாலும், ஒருவன் தின்றதைத் தின்ன நேரினும் முப்பத்திரண்டு தடவையும் நூற்றிருபத்தெட்டு தடவையும் வாய் கொப்புளிப்பதால் தூய்மை விளைகிறது.

முகத்தைக் கழுவி, இடப்பக்கம் வாய் கொப்புளித்தால், தூய்மை யுண்டாகும். மயங்கி வலப்பக்கம் கொப்புளித்தால், இரௌரவம் என்னும் நரகத்தையடைகிறான்.

— வேறு இடத்தில்.

முமுட்சுவானவன் நாடோறும் பல்துலக்க வேண்டும். பாவங்களனைத்தையும் போக்குவதும் சுபமானதுமான மலஸ்நானம் செய்யத்தக்கது. — சிந்தியவிசுவாகமத்தில்.

பஞ்சஸ்நாந விதி. ஐவகையான நீராட்டு :

அம்மையே! சிறந்த தூய்மையின் பொருட்டு ஐவகையான ஸ்நானங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவை:- வாருணஸ்நானம் (நீராடுதல்) ஆக்னேயஸ்நானம் (நீறு ஆடுதல்) திவ்யஸ்நானம் (வெயிலாலும் மழையிலாலும் ஆடுதல்) வாயவ்யஸ்நானம் (பசுவின் கால் புழுதியில் ஆடுதல்) மானஸஸ்நானம் (மந்திரங்களால் மனத்தால் நீராடியதாகப் பாவித்தல்) என்பனவாகும். அவற்றுள் வாருண ஸ்நானம் நதி, குளம்முதலான நீரில் ஆடுதல். விபூதியால் ஆடுதல் ஆக்னேயஸ்நானம் அல்லது பஸ்மஸ்நானம் எனப்படும். மழையினாலும் வெயிலாலும் குளித்தல் தெய்வஸ்நானம். மாலை நேரத்தில் பசுமந்தையின் புழுதியில் ஆடுதல் வாயுஸ்நானம், மந்திரங்களை மனத்தில் எண்ணுவதால் ஆடுவது மானஸிகஸ்நானம் என ஐந்துவகை யாட்டுக்களும் விவரிக்கப் பட்டுள்ளன. — காமிகத்தில்.

ஆறு குளம் தடாகம் கிணறு இவற்றில் ஆடுவதால் நீராட்டு நான்குவகையாம். ஆறுமுதலியவைகள் உள்ளபோது கிணற்றில் மூழ்கக்கூடாது. இல்லையானால் கிணற்றில்மூழ்கலாம். குற்றமில்லை. ஆறுள்ளபோது தடாகங்களிலும் மூழ்கக்கூடாது.

கிணற்றைக்காட்டிலும் பத்துமடங்கு சிறந்தது குளம். குளத்தைக்காட்டிலும் பதின் மடங்கு சிறந்தது ஆறு. ஆறுகளில் கடலையடையும் ஆறுகள் பதின்மடங்கு பயனைத்தருவதாம். அவற்றிலும் கிழக்கு நோக்கி ஓடும் ஆறுகள் நூறு மடங்கு புண்யத்தால் உயர்ந்தன. நீரோட்டத்திற்கு எதிர்த்து நின்று மூழ்குக.

அதிலும் தென்கரை எல்லையற்ற பயனை அளிப்பது. நீர் தூய்மை யானதாயினும் இல்லையாயினும் சிவனுறையும் இடத்தில் வருவ தால்-சிவாலயத்தின் பக்கத்தில் ஓடுவதால் சிவகங்கை என்றறிக.

— சிந்திவிசுவாகமத்தில்.

தேவாலயத்தில் உள்ள தீர்த்தத்தை ஒருபோதும் குறை கூறற்க. அதுமிகமிகத் தூய்மையானது. அதில் ஆடுக. அன்றித் தன்வீட்டில் வெந்நீரிலோ தண்ணீரிலோ குளிக்க நேர்ந்தால் ஒன்பது, எட்டு, ஐந்து குடங்களில் சிவமூலமந்திரத்தால் செபிக் கப்பட்டதாக - மெழுகிய பூமியைத் தீண்டும் பீடத்தில் இருந்து நீராடுக.

நீரில் கொப்புழ்வரை யிறங்கி, மண்ணாலும் நீராலும் அரை யைத் தேய்த்துக் கழுவி, நீராடித் தோய்த்துலர்ந்த ஆடையால் துடைத்துக்கொள்வது காபில ஸ்நானம் எனப்படும். பெண்கள், குழந்தைகள், கிழவர்கள், நோயாளிகள், வெந்நீரிலாவது தண்ணீராயின் கழுத்துவரை குளிக்கலாம். இது கண்டஸ்நானம் எனப்படும்.

பிறர் வெய்ய - பிறருக்குச் சொந்தமான குளத்தில் ஐந்துபிடி மண்ணை எடுத்துக் கரையில் போட்டுவிட்டன்றிக் குளித்த லாகாது.

மண்குடத்தில் குளிப்பதைக் காட்டிலும் செப்புக் குடத்தால் குளிப்பது நூறு மடங்கு சிறந்தது. செப்புக்குடத்தைக் காட்டிலும் வெள்ளிக்குடம் நூறுமடங்கு அதைக்காட்டிலும் பொற்குடம் நூறுமடங்கும் உயர்ந்தவை. கும்பநீரும் வீழ்வதால் குளத்திற்குக் குளிப்பதற்குச் சமமாகும். — சைவ மகா புராணத்தில்

இரவில் குளித்தல் விதிக்கப்படாத செயல். கிரகண புண்ய காலமாயின் குளிக்கலாம். நாடோறும் இரவில் குளிப்பவர்கள், விருத்திரனுடைய குருதி ஓடுவதாக எண்ணுக. நீரன்று என்பதாம். ஆதலால் ஒருபோதும் ஸ்நானபானங்களைச் செய்தல் கூடாது.

அங்ஙனம் எப்போதாவது செய்யநேரின் தேசிக உத்தமன் பொன்னையாவது, நெருப்பையாவது நீரின்முன் காட்டிவிட்டு, மும்முறை பிராணாயாமம் செய்விக்கக்கடவன். ஜல சுத்தியின்றி இரவில் நீராடுதல் கூடாது. ஆகையால் தனக்காயினும்-தேவதை வழிபாட்டிற்காயினும் ஸ்நானத்தைப் பகலிலேயே செய்க.

— சுப்ரபேதாகமத்தில்.

(தொடரும்)

யுக தர்மங்கள்

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

நமது ஹிந்து மதப் பிரகாரம் நான்கு யுகங்கள். அவை கிருதயுகம், த்ரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன. ஒவ்வொரு யுகத்திற்கும், ஒவ்வொரு யுக தர்மம் – அந்தந்தக் கால தர்மம் – உண்டு. யுக தர்மம் என்றால் அந்தந்த யுகத்தில் இருக்கக் கூடிய தர்மங்கள், செய்கைகள், பொருள்களின் தன்மைகள் என்று பல பொருள்கள் உண்டு.

கிருதயுகத்தில்: மனிதனுக்குச் சராசரி வயதானது ஐம்பதாயிரம் – லட்சம் என இவ்விதமாகச் சொல்லப்படுகிறது. அவனுடைய ஆயுள் பெறுமானத்திற்குத் தகுந்தவாறு ஆகாரபலம், சரீர பலம், மனோ பலம், புத்திபலம் முதலிய பலவிதமான சக்திகளுங் கூடக் கூடுதலாகவே இருக்கின்றன.

15 நாட்கள், ஒரு மாதம், ஒரு வருடம், ஏன் பல்லாண்டு காலம் கூட அன்னம் முதலிய உணவுகளை உட்கொள்ளாமல் கிழங்கு, இலை, பால் முதலிய பொருள்களை உட்கொண்டு ஜீவிப்பவர்களுடைய வரலாறுகளையும் வண்டி வண்டியாக ஆகாரங்களை உட்கொள்பவர்களுடைய வரலாறுகளையும் காண்கிறோம்.

அதுபோலப் பெருத்த ஆயுதங்களால் வெட்டுப்பட்டாலும் சாகாமல் பெரும் தெம்புடன் இருப்பவர்களுடைய வரலாற்றையும் காண்கிறோம். எவ்வளவு பெரிய துன்பம் வந்தாலும், யுத்தம் வந்தாலும் கஷ்டம் வந்தாலும், தாங்கக் கூடிய மனோபலம் பொருந்தியவர்களையும் வரலாற்றில் காண்கிறோம்.

ஒரே தடவையில் பல விஷயங்களை அறிந்துகொள்பவர்களையும்; பல விஷயங்களைப் பற்றிய ஞாபக சக்தி உள்ளவர்களையும், பல விஷயங்களைப் பற்றிப் பேசுபவர்களையும், காண்கிறோம். உடலில் எது வரையில் எலும்பு இருக்கிறதோ, அதுவரையில் உயிருக்கு ஆபத்து கிடையாது என்பது கிருதயுகத்தின் தர்மம். தவிர, திருடு போன்ற அதர்மம் என்பது மிகமிக அரிது. ஞானமும், தர்மமும் பரிபூரணமாக நிறைந்திருப்பது கிருதயுகத்தின் தர்மம்; அத்துடன் யக்ஞங்களே பிரதானமானவை.

த்ரேதாயுகத்தில் தர்மம் ஞானம், ஆயுள், ஆகாரம் எல்லாம், கிருதயுகத்தில் உள்ளதைவிடக் குறைந்து, ஒவ்வொன்றும் முக்கால் பங்குதான் இருந்தன. த்ரேதாயுகத்திற்கு முன்பு கிருதயுகத்தில், மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரசிம்ம, வாமன என்ற அவதாரங்கள் உண்டு.

காரியத்திற்காக அவதாரம் எடுத்துக் காரியம் முடிந்தவுடன் அது மறைந்து விடுகிறது. பரசுராம அவதாரம் முதல் கிருஷ்ணவதாரம் முடிய (பரசுராமர், ராமர், பலராமர், கிருஷ்ணன்) இந்த நான்கு அவதாரங்களுடைய வரலாறுகளும், பிறந்தது முதல் அவர்களுடைய லீலைகள் முழுவதும் உடையவையாக - பூர்ணவதாரமாக அமைகின்றன.

மத்ஸ்யாவதாரம் ஒரு அசுரனைக் கொல்வதற்காகவும், கூர்மாவதாரம் உலகைத் தாங்கிக்கொள்வதற்காகவும்; வராஹாவதாரம் ஒரு அசுரனைக் கொல்வதற்காகவும், நரசிம்மாவதாரம் ஒரு அசுரனைக் கொல்வதற்காகவும், வாமனவதாரம் ஒரு அசுரனின் அகங்காரத்தை அடக்குவதற்காகவும், பரசுராமாவதாரம் பல துஷ்ட அசுரர்களைக் கொல்வதற்காகவும், இராமாவதாரம் பல இராக்ஷஸர்களைக் கொல்வதற்காகவும், பலராமகிருஷ்ண அவதாரங்கள், போன்றவை பல ராக்ஷஸ சக்தியுடையவர்களைக் கொல்வதற்காகவும், ஏற்பட்டு இருக்கின்றன.

கலியுகத்தின் கடைசியில் வரப்போகிற கல்கி அவதாரத்தின் மூலமாக மிலேச்சர்களை லட்சக் கணக்கில் கொல்லக்கூடியவராகவும், அவதாரம் ஏற்படப் போகிறது. கிருதயுகத்தில் தர்ம ஆசரணை செய்பவர்களுக்கு அதிகமாகத் துன்பமில்லை ஆனால், தர்மமும்; ஞானமும், பக்தியும் என்னிடமே செய்ய வேண்டுமென்றும், நானே பகவத் ஸ்வரூபம் என்றும் சொல்லிக்கொண்டு வந்தவர்களை பகவான் அவதாரங்களின் மூலம் வதம் செய்கிறார். ஆகவே கிருதயுகத்தில் ஏற்பட்ட அவதாரங்களின் மூலமாக அதர்ம வழிகளில் சென்ற நான்கு, ஐந்து பேர்களுக்கே மரணம், வதம் சம்பவித்தது.

திரேதாயுகத்தில் யார் யார், தர்ம மார்க்கத்திலும், ஞான மார்க்கத்திலும், ஈடுபட்டார்களோ அவர்களுக்கெல்லாம் இடையூறுகள் ராக்ஷஸர்களால் ஏற்படுத்தப்பட்டன. துவாபரயுகத்தில் "பகவான் என்பதே கிடையாது. அரசர்கள் வடிவத்தில் பகவான் இருந்து வந்தார். ஆகவே இறைவனுக்கென்று தனியாக ஒன்றும் செய்ய வேண்டாம். எதன் மூலம் பொருள்கள் கிடைக்கின்றனவோ அவைகளைத் தொடர்ந்து பூஜித்து வாருங்கள்" என்று

அசுரர்களின் ஆணையால் ஜனங்களும் கூட விருப்பமாயிருந்தும் தர்மம் செய்யமுடியாத நிலையில் இருந்துவந்தார்கள். இக் கலி யுகத்தில் அரசர்களே இல்லாமல், தங்களுக்குத் தாங்களே அரசர் களாக நினைத்துக்கொண்டு, ஸ்திரமில்லாத முறையில் காரியங் களைச் செய்துகொண்டு, ஆடம்பரத்திற்காகவும், உடல் வளர்ச்சிக் காகவுமே காரியங்களைச் செய்துகொண்டு, மனிதனுக்கு இருக்க வேண்டிய கடமைகளையும் கூட மறந்து, சமுதாயம் சின்ன பின்ன மாய் ஆனபொழுது, கல்கி அவதாரத்தின் மூலமாக மிலேச்சர் களாயுள்ள எல்லோரையும் வதம் செய்து கிருதயுக தர்மத்தைத் தொடங்கி வைக்கிறார்.

துவாபர யுகத்தில் பாதி தர்மமும், பாதி அதர்மமும் தேசம் முழுவதும், ஆகிவிடுகிறது. ஒரே குடும்பத்தில் பிறந்த இருவரில் ஒருவர் தர்ம மார்க்கத்திலும், மற்றொருவர் அதர்ம மார்க்கத்தி லும் செல்லும்படியாக ஏற்பட்டு விடுகிறது. ஆகவே மாபெரும் யுத்தங்களின் மூலமாகவும், தேவதா அம்சங்களின் மூலமாகவும், அதர்மத்தில் உள்ளவர்களை அழிக்க வேண்டியநிலை ஏற்பட்டது,

பகவானுடைய அவதாரத்தோடு இல்லாமல் தேவதா அம் சங்கள் மூலமாகவும் பலபேருடைய வதமானது நடைபெற்றது. ஆகவே தான் மகாபாரத யுத்தம், ஜராசந்தன் வதம் முதலிய யுத்தங்களில் தேவதா அம்சங்கள் பொருந்தியவர்களால் பலரை வதம் செய்ய நேர்ந்தது. கலியுகத்திலோவெனில் தர்மம் - கர்மம்- ஞானம் - பக்தி எல்லாம் வாயளவில் இருந்துகொண்டு கால் பாகத்தில் இருக்கிறது.

ஆனாலும் தேவதா அம்சமுள்ள பல மஹாபுருஷர்களும், ஞானிகளும் மதாசாரியர்களும், தியாக சிகாமணிகளும், தோன்றி ஜனங்களுக்கு அவ்வப்போது நல்ல உபதேசங்களைச் செய்து கொண்டும், நல்ல வழிகளில் வாழ்ந்துகொண்டும் இருக்கிறார்கள். வரவும் போகிறார்கள்.

த்ரேதாயுகத்தில் மாமிசம் உடலில் எதுவரையில் இருக் கிறதோ அதுவரையில் உயிர் தாங்கப்படுகிறது. துவாபரயுகத் திலோ உடலில் எதுவரை இரத்தம் இருக்கிறதோ, அது வரை யில், உயிர் இருக்கிறது.

கலியுகத்திலோ எதுவரை ஆகாரம் உட்கொள்கிறோமோ அதுவரையில் உயிர் இருக்கிறது. நூறு வயதுக்குமேல்இருப்பது கலியுகத்தில் ஆச்சரியம். துவாபரயுகத்தில் ஆயிரக்கணக்கான ஆயுள் பரிமாணம் உண்டு.

திரேதாயுகத்தில் பதினாயிரக் கணக்கில் ஆயுள் பரிமாணம் உண்டு, கிருதயுகத்தில் யஞ்ஞம், தவம், செய்வதையேஎல்லோரும் விரும்பினார்கள்.

துவாபர யுகத்தில் பகவானை பூஜிப்பது, தியானிப்பது போன்றவைகளை விரும்பினார்கள். கலியுகத்திலோ, பகவானுக் கென்று தனி இடம் ஒன்று ஒதுக்கி விட்டு அங்குச் சென்று தரிசனம் செய்துவிட்டு வருவது என்ற நிலைவந்து விடுகிறது. ஆகவே தான் கிருத-த்ரேதா - துவாபரயுகங்களில் கோவில்கள் பிரதானமாகக் கிடையா.

ஆத்ம விசாரத்தின் மூலமாகவும், மனத்தில் ஏகாக்ரத்தின் மூலமாகவும், தவத்தினாலும், பூஜையினாலும், பரமாத்மசொரு பத்தை அனுபத்தார்கள்.

கலியுகத்திலோவெனில், மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டி ருக்குமாதலால் பகவானைத் தியானிப்பது முதலியவைகள் துர்லப மாக இருப்பதால், கோவில்களில் மூர்த்தி ஸான்னித்யம்வரும் படிச் செய்வித்து அதன் மூலம் நாட்டிற்கு க்ஷேமம் ஏற்படும்படிச் செய்யப்பட்டு வருகிறது.

திரேதாயுகம், துவாபரயுகம் முதலியவைகளில் அரசர் களின் குலதேவதைகளுக்கோ, கிராம, நகர தேவதைகளுக்கோ கோவில்கள் உண்டு. கலியுகத்திலோ வெனில் எல்லாவிதமான தேவதைகளுக்கும், ஈசுவர மூர்த்திகளுக்கும், அவதாரமூர்த்தி களுக்கும், மதாசாரியர்களுக்கும், பக்தசிகாமணிகளுக்கும், மூர்த்தி கள் உண்டு. கோவில்கள் உண்டு. ஆகவே பொதுவாக எல்லா ஜனங்களுக்கும் கோவில்மூலமாக வழிபாடுகள் ஏற்படுவது கலியுக ஆரம்பத்தில்தான்.

கோவில்கள் மூன்று விதமாக உண்டாகின்றன, முன் யுகங் களில் பல பெரியோர்கள் தவம்செய்து, அவர்களுக்கு அவற்றின் பலனாக இறைவன் காட்சிஅளிக்க வந்த இடங்களில் பிற்காலத் தில் கலியுகத்தில் ஸ்தல மஹாத்மியத்தை அறிந்து மூர்த்திப் பிரதிஷ்டை செய்வித்துக் கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன இவை முதல் விதம்.

பற்பல பெரிய அரசர்கள் பெரும் பெரும் யுத்தம் செய்து பல்லாயிரக் கணக்கான ஐச்வர்யங்கள்பெற்று, அந்தப் போரில் மடிந்தவர்களுக்குக் காரணமாக இருந்த தங்களுடைய பாபங் களைப் போக்கடிப்பதற்காகவும், உலகில் உள்ள எல்லாக் கலை

களையும் காப்பாற்றும் நோக்கத்துடனும், தங்கள் இஷ்டங்கள் பூர்த்தியான நினைவுச் சின்னங்களுக்காகவும், பல கோவில்கள் கட்டியுள்ளனர். இவை இரண்டாவது விதம்.

மூன்றாவதாகக் கிராமங்கள், நகரங்கள் அமைத்து ஒரு முறையான வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டபொழுது அந்தக் கிராம, நகரத்தின் சுபிட்சத்திற்காகவும், கோவில்கள் கட்டப்பட்டன.

முதலாவதாகச் சொன்ன கோவில்கள் சிலவற்றிற்கு ஸ்தல புராணங்களும், சித்திரங்களும் இருக்கும். ஆனால் எங்குக் கோவில் அமைக்கப்பட்டு இருந்தாலும் அந்தக் கோவில்களில் எந்த மூர்த்தியாக இருந்தாலும், அந்தந்த மூர்த்திகளுக்கு வரலாறு கட்டாயம் இருக்கும்.

ஆகவே முக்கியமாகக் கோவில் வழிபாடு, மூர்த்தி பூஜை முதலியவைகளெல்லாம், துர்பலமான மனத்தை உடையவர்களான, மனிதர்களுடைய கலியுக ஆரம்பத்தில்தான், கிராம, நகர, க்ஷேமத்திற்காக ஏற்படுத்தப்பட்டன. வீட்டிலும் பூஜைகள் நடை பெறலாம். அதன் பலன் வீட்டில் உள்ளவர்களுக்கோ, செய்பவர்களுக்கோ மாத்திரம் கிடைக்கிறது. கோவில்களில் செய்யும் பூஜைகளின் பலன் கிராம நகர சுபிட்சத்திற்காக ஆகிறது.

யுகதர்மங்கள் எவ்விதம் இருந்தாலும், நமக்கேற்பட்ட தர்மங்களோடு நாம் காரியங்களைச்செய்து கொண்டிருந்தால் சீக்கிரமாக நாம் நல்ல நிலையை அடையலாம். உதாரணமாகத் தற்பொழுது திருடவும், கொலை செய்யவும் வருபவர்கள் கடிதம் எழுதிவிட்டுக் கூட வருகிறார்கள். வருவது திண்ணம் என்று அறிந்தும் கூட நாம் எல்லாப் பொருள்களையும், கொடுத்துவிட்டு நம்மை நாம் அழித்துக்கொள்வதற்குத் தயாராக ஆவதில்லை.

திருடுவதற்கோ, கொலை செய்வதற்கோ வருவது எப்பொழுது தெரிந்து விடுகிறதோ, அப்பொழுது முதற்கொண்டே சீக்கிரமாக நம்முடையபொருள்களையும், நமது உயிரையும் பாது காத்துக் கொள்வதற்கு மிகவும் பிரயாசை எடுத்துக் கொள்கிறோம். அது போல, கலியுக தர்மத்திற்கு ஏற்றவாறு அதில் மூழ்கி விடாமல், கரையேறிச் செல்வதற்கு நாம் வழிதேட வேண்டும்.

நன்றி — கலாவல்லி, டிசம்பர் - 1976.

சிவ வழிபாடு

திரு. வி. கோபாலன்

[சிவராத்திரி, சிவபெருமானுக்குச் சிறப்பான நாள் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று நாயன் மார்களும் அவனைப் போற்றி ஏத்தியுள்ளனர்.]

சிவம் என்றால் அன்பு, இன்பம், மங்கலம் என்று பொருள். அன்பாக - அருட்பெருஞ் சோதியாக, இன்பமாக - ஈசுவரனாக, மங்கலமாக - மறைப் பொருளாக எங்கும் நீக்கமற நிறைந் திருக்கும் அந்தப் பரமனைக் கடல் கொஞ்சும் குமரி முதல் கைலைப் பனிமலை வரை ஆலயங்கள் பலவற்றில் அமர்த்தி வழிபட்ட பெருமை மிக்கது இந்தப் புண்ணிய பூமி. சிவவழிபாட்டின் சிறப் புக்களை வேதங்கள் விளக்குகின்றன; இதிகாசங்கள் எடுத்துரைக் கின்றன; உபநிஷதங்கள் உணர்த்துகின்றன; புராணங்கள் பகருகின்றன.

வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் சிவபெருமான் ருத்திரன் என்ற பெயரில் குறிப்பிடப்படுகிறார். ருத்திரன் என்றால் துன்பங்களைத் துடைப்பவன் என்று பொருள்.

'எங்கள் குழந்தைகளைக் காப்பாற்று' 'எங்கள் பெற்றோர் களைக் காப்பாற்று' 'எங்கள் பசுக்களைக் காப்பாற்று' என்று சிவபிரானை வேண்டும் ரிக்குகள் ரிக்வேத மந்திரங்களில் வருகின்றன.

பசுபதி, பூதபதி, பூதநாதர் என்பன வேதங்கள் ருத்திர னுக்குச் சூட்டும் சிறப்புப் பெயர்கள். சிவன் உக்கிர வடிவினன்; ஜடாமுடி கொண்டவன், நோய்களைத்தீர்ப்பவன், பல வடிவங்கள் கொண்டவன் என்று ரிக் வேதத்தின் பிற்கால சூக்தங்கள் வருணிக்கின்றன.

சிவ வழிபாட்டின் மகிமையை முதல் முதலாக உணர்த்திய தனி நூல் சுவேதாசுவதர உபநிஷதமாகும். ருத்திரனின் பேராற் றல்களை வருணிக்கும் அந்நூல் ருத்திர சிவ வழிபாட்டுக்கு ஒரு திறவுகோல் எனலாம். சுக்லயஜுர் வேதத்தில் சிவனின் நூறு நாமங்கள் கூறப்பட்டிருக்கின்றன. யஜுர்வேதம், 'நம சிவாய என்று முழங்குகிறது. 'நம: சிவாய சிவதராயச' என்பது யஜுர் வேத வாக்கு. மகாபாரதம், சிவபிரானின் ஆயிரம் நாமங்களை - சிவசகஸ்ர நாமத்தைக் கூறுகிறது.

பதஞ்சலி முனிவரின் 'மகாபாஷ்யம்' சிவனின் பெருமையையும் சிவனடியார் இயல்புகளையும் சுவைபடச் சித்தரிக்கிறது' வியாசர் அருளிய 'சிவபுராணம்' ஆதிசங்கரரின் 'சிவானந்தலகரி, அப்பைய தீட்சதரின் சிவார்க்கமணி தீபிகா' ஆகியவை ஒப்பற்ற சிவபக்தி நறுமலர்கள்.

"சைவ சமயமே மிகப்பழமையதும்; இப்போது உயிருள்ளதுமான சமயம்; சிந்து சமவெளி எங்கும் சிவலிங்கங்கள் காணப்படுகின்றன" என்கிறுர் தொல்பொருள் அறிஞர் ஜான் மார்ஷல்.

ஈராஸ் பாதிரியார் சிந்து சமவெளியில் காணப்படும் எழுத்துக்களில் 'எணுன்' என்று வருவது எண் குணத்தான் என்னும் சிவனே என்று கூறி, சிவ வழிபாட்டின் தொன்மைச் சிறப்புக்கு ஒரு கோடி காட்டுகிறுர். கிறித்துவ சகாப்தத்துக்குப் பல நூறு ஆண்டுகள் முற்பட்ட மொகஞ்சதாரோவில் கண்டெடுத்த முத்திரைகள் பலவற்றில் சிவவடிவங்கள் காண்கின்றன. அவற்றில், ஒருமுத்திரையில் இறைவன், தவம் புரியும் ஞானக் கோலத்தில் யோகமூர்த்தியாகச் சித்திரிக்கப் பட்டிருக்கிறுர்..

கி. மு. இரண்டாயிரம் நூற்றுண்டளவில் சைவம் தனிச் சமயமாகச் செல்வாக்குப் பெற்றுவிட்டது. காந்தார நாடு சைவத்தின் நிலைக்களனுக விளங்கியது. சக வம்சத்து அரசன் மோஹன் வெளியிட்ட செப்பு நாணயங்களில் நந்தி உருவங்கள் பொறிக்கப் பட்டன. சிவலிங்க வழிபாட்டை நாடெங்கும் பிரபலப்படுத்தியவர்கள் நாகவம்சத்து அரசர்களே, ஆர்யாவர்த்தத்துக்குத் தென்புறத்தே இருந்த பாரசிவர், சுட்டுநாகர் மகாநாகர் ஆகிய அரசமரபினர் வழிபட்டதால் சிவனைத் தட்சிணுபதி, தெற்கத்தியர் என்று ஆரியர்கள் வழங்கினர். ரிக்வேதமும் 'தட்சிணுபதம்' என்றே தென்னுட்டைக் குறிப்பிடுகிறது. இதனுலேயே இறைவனைத் 'தென்னுடுடைய சிவனேபோற்றி!' என்று போற்றினர் போலும்!

சிவபெருமானை லிங்கவடிவில் வழிபடும் தொடர்பாகப் பல புராணவழக்குகள் உள்ளன. திருமாலுக்கும் பிரம்மனுக்கும் தம் சக்தியை உணர்த்தப் பேரொளிப் பிழம்பாக, அண்ணுமலையாகச் சிவபெருமான் நின்ற வரலாறு அனைவரும் அறிந்ததே. ஜோதி சொரூபமே லிங்கம். தென்னகத்தில் சிவ-சக்தி ஐக்கிய வடிவே லிங்கமாகக் கருதப்படுகிறது. ஆலயங்கள் அனைத்திலும் சிவபிரான் லிங்க வடிவிலேயே எழுந்தருளியுள்ளார். ஆந்திரத்துக் குடிமல்லம் ஆலயத்திலுள்ள சிவ லிங்கமே மிகப் பழமையான லிங்கத் திருமேனி என்று கருதுவர். அந்தக் கோயிலின் காலம் கி. மு. இரண்டு அல்லது மூன்றும் நூற்றுண்டாகும்.

இலிங்க தத்துவம், அவற்றின் அமைப்பு, லட்சணங்கள் ஆகியவை பற்றி 'மகுடாகமம்' என்ற நூல் விரிவாகச் சொல்கிறது' 'தெய்விகம்', 'அர்ச்சா' 'காணபம்', 'மானுஷ்யம்' என்று லிங்கங்கள் நான்கு வகையானவை. 'தெய்விகம்', 'அர்ச்சா' என்ற இரண்டும் தேவர்களாலும் ரிஷிகளாலும் ஸ்தாபிக்கப் பட்டவை. காணபம் கணங்களாலும், மானுஷம் மனிதர்களாலும் வணங்கத் தக்கவை. 'காமிகாமம் அறுவகை லிங்கங்களைக் குறிப்பிடுகிறது. அவை, சுயம்பு, தெய்விகம், காணபம், மானுஷ்யம், அர்ச்சா, பாண லிங்கம் என்பன. சுயம்புலிங்கம் தானே தோன்றுவது. பாண லிங்கம் என்பது சாளக்கிராமம் போன்ற ஸ்படிகக் கற்களால் ஆனது. இவை இயற்கையாகக் கண்டகி, ரேவா, நர்மதா போன்ற நதி தீரங்களில் கிடைக்கின்றன.

மானுஷ்ய லிங்கம் என்னும், மனிதர்களால் கல்லில் செதுக்கப்படும் லிங்கம் மூன்று பாகங்களாக உருவாக்கப்படவேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. இவை பிரம்ம பாகம், விஷ்ணு பாகம், ருத்திர பாகம் என்பன. இதில் ருத்திர பாகம் என்னும் மேற்பகுதியே பூஜாபாகம் எனப்படுகிறது. பூஜா பாகத்திலேயே அர்ச்சனை; அபிஷேகம் ஆகியவை செய்தல் வேண்டும் என்பது பொது விதி.

பிற்காலத்தில் தோன்றிய சில ஆகம நூல்கள் லிங்கத்தின் ருத்ரபாதம் என்னும் மேற்பகுதியில் 'பிரம்ம சூத்திரம்' என்னும் சில நுட்பமான கோடுகள் அமைப்பது பற்றிக் கூறுகின்றன. இவை மனிதர்களால் அமைக்கப்படும் மானுஷ லிங்கத்துக்கு மட்டும் அமைத்தால் போதும் என்று 'மகுடாகமம்' என்ற நூல் கூறுகிறது.

நேபாளத்தில் உள்ள பசுபதிநாத் முதல் கொழும்புவிலுள்ள திரிகோணமலை வரையில் தவப் பெருமையும் மூர்த்திப் பெருமையும் மிக்க புராதனமான சிவாலயங்கள் பல உள்ளன. தேசம் முழுவதும் சைவம் கொடிகட்டிப் பறந்ததை நாட்டில் பரவலாக அமைந்து போற்றப்படும் கீர்த்தி மிக்க பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களிலிருந்து அறியலாம். கொடியவன் கஜினிமுகம்மது அழித்த சோமநாதபுரத்துச் சிவலிங்கம், உஜ்ஜைனி மாநகரத்துச் சிவலிங்கம், நர்மதை நதிக்கரையில் உள்ள ஓங்காரநாதர், நாசிக் பகுதியில் உள்ள திரியம்பகேசுவரர், காசி ஸ்ரீ விசுவநாதர், இமயமலைச் சாரலிலுள்ள கேதாரீசுவரர், கர்நூல் மாவட்டத்து ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர், இராமேசுவரத்திலுள்ள இராமநாத சுவாமி ஆகியவை அவை. சிவலிங்கங்கள், தமிழ் நூல்களில் அண்டலிங்கம், பிண்டலிங்கம், ஆன்மலிங்கம், ஞானலிங்கம், எனக் குறிக்கப்படுகின்றன.

பஞ்சபூதத் தலங்கள் என்னும் ஐந்து தலங்கள் சிவபெருமானுக்குச் சிறப்பாக உரியவை. அவ்விடங்களில் இறைவன் பூமி, நீர், வாயு, அக்கினி, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களோடு தொடர்பு கொண்டு விளங்குகிறான். திருவாரூரில் பிருதுவி (பூமி) வடிவாகவும், ஜம்புகேசுவரத்தில் அப்பு (நீர்) வடிவாகவும், காளஹஸ்தியில் வாயு வடிவாகவும், திருவண்ணாமலையில் அக்னி வடிவாகவும், சிதம்பரத்தில் ஆகாய வடிவிலும் சிவபிரான் விளங்குவதாக ஐதிஹ்யம். இந்த பஞ்சபூதத் தலங்களுடன் சிவபெருமானின் கருணைக்கும் கனிவுக்கும் சான்றாக விளங்கும் புனிதத் தலங்கள் எண்ணற்றவை உள்ளன.

'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று குறிப்பிடுமளவுக்கு அப்பெருமானைத் தென்னகத்தின் நாயகனாக்கிய பெருமை நாயன்மார்கள் என்ற சைவ அடியார்களுக்கே உரியது. அவர்கள் சொல்லோவியம் தீட்டித் தேவாரமும் திருவாசகமும் புனைந்தார்கள் என்றால், நாடாண்ட மன்னர்கள் கல்லோவியம் தீட்டி வானளாவும் ஆலயங்களை எழுப்பி மண்ணிலே விண்ணைக் கண்டனர்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பல்லவ வேந்தன் மகேந்திரவர்மன் முதலில் சமண மதத்தைச் சார்ந்திருந்து, பிறகு திருநாவுக்கரசர் முயற்சியால் சைவரானதை வரலாறு கூறுகிறது. பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த தஞ்சை, கண்டராதித்தியனின் மனைவி செம்பியன் மாதேவி தம் கணவனையே சிவலிங்கமாகப் பூஜித்தாளாம்.

சிவ வழிபாடு பிற நாடுகளிலும் செல்வாக்குப் பெற்று விளங்கியதையும், கடல் கடந்த நாடுகளில் சிவாலயங்கள் உள்ளதையும் வரலாறு கூறுகிறது. அமெரிக்காவில் கொலஹடோ ஆற்றங்கரையில் பத்தாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சிவாலயம் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். பிலிப்பைன்ஸ் மக்கள் சிவனை சிவப்பன் என்று வழங்குகின்றனர். ஆசியாவில் சிவாஸ் என்று ஒரு நகர் இருந்தது அங்கே சிவ வழிபாடும், ரிஷப வழிபாடும் இருந்தன. இந்தோனேசியாவில் இப்போதும் சிவாலயங்கள் உள்ளன. இலங்கையில் சிவன் ஒளி பாதமலை இருக்கிறது. ஜப்பானியரின் புராதனத் தெய்வம் 'சிவோ' என்பது. பின்லாந்து மக்களின் காவல் தெய்வம் சிவனே. கொரியாவில் வீதிதோறும் சிவாலயம் அமைத்து வழிபட்டனர். பாபிலோனியாவின் களிமண் ஏடுகளில் சிவன் என்பது மாதப்பெயராகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அக்கேடிய மக்களின் ஏழு முக்கிய நட்சத்திரப் பெயர்களில் சிவன் என்பதும் ஒன்று. எகிப்திய நதிக்கரையில் சிவலிங்கங்கள் கண்டுபிடிக்கப்

பட்டுள்ளன. சயாம் மன்னரின் முடி சூட்டு வைபவத்தில் மாணிக்கவாசகரின் திருவெம்பாவை 'லோரெம்பாவாய்' என்று பாலி லிபியில் எழுதிப் படிக்கப்பட்டு வந்தது.

சிவபிரானுடைய திருவிளையாடல்கள் பலவற்றைச் சிவ புராணங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஞான மார்க்கத்துக்கு வழிகாட்டும் சைவம் நளினக் கலைகளையும் வளர்த்து வந்திருக்கிறது. சிற்ப எழில்மிக்க அற்புத ஆலயங்கள் வரிசையில் வடபுலத்தில் உள்ள குலுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள பாஜ்ரா மகாதேவர் ஆலயம். அல்மோராவை அடுத்த பீனேஷ்வர் ஆலயம், கேதாரிநாத், கஜுராஹோ மகாதேவர் கோயில்கள், உஜ்ஜைனி, புவனேசுவரம், நாசிக் மகேசுவரர் திருக்கோயில்கள், தென்புலத்தில் கர்நாடகத்தில் சிருங்கேரி வித்யாரண்யர் ஆலயம், நஞ்சன்கூடு நஞ்சுண்டேசுவரர்கோயில், ஆந்திரத்து லேபாட்சி, ஸ்ரீ சைலம், காளஹஸ்திக் கோயில்கள், கேரளத்து வைக்கம், எட்டுமானூர், வடக்கு நாதர் ஆலயங்கள், தமிழகத்தில் சிதம்பரம், மதுரை, குடந்தை, தஞ்சை, காஞ்சி, திருவண்ணமலை. இராமேசுவரம், மயிலை ஆலயங்கள் ஆகியவை தலப்பெருமையும் கலைப் பெருமையும் இணைந்தவை.

தமிழகத்தில் இந்தியச் சிற்பக் கலைக்குப் பெரும் பணி புரிந்த பல்லவர், பாண்டியர், சோழர், விஜயநகர அரசர்கள் கைவண்ணத்திலும் மெய்வண்ணத்திலும் மலர்ந்த ஆலயங்கள் பலவற்றில் ஆகமங்கள் வருணிக்கும் அரனின் அழகு வடிவங்களைக் காண்கிறோம். சிவபெருமானின் அர்த்தநாரீச்வரர், ஹரி ஹரர், தட்சணாமூர்த்தி, கல்யாணசுந்தரர், கஜசம்ஹாரர், சோமாஸ்கந்தர், பிட்சாடணர், கங்காதரர், பைரவர், சண்டேச அனுக்கிரக மூர்த்தி, ரிஷபாருடர், காலாரி, திரிபுராந்தகர், காமாந்தகர், உமாசகிதர், சரபமூர்த்தி, சுகாசனர், விருஷாப ஹரணர் ஆகிய திருக்கோலங்களைக் கல்லிலும் செம்பிலும் கண்ணாரக் காணலாம்.

சிவபெருமான் ஆடும் அழகன். தமிழகத்துக் கலைப் படைப்புக்களில் ஆடல் தேவனின் அழகு வடிவங்கள் தனி இடம் பெற்றவை. பிறை சூடிய பெருமான் கலைக்கு ஒரு தெய்வம் அல்லவா? அழகுக் கலைகள் அவனைச் சரணடைந்ததில் வியப்பில்லைதான். சிவதாண்டவத்தின் பேரெழிலை, தத்ரூபமான படப்பிடிப்பை, திருவெண்காடு, திருவாலங்காடு, நல்லூர், குடந்தை நாகேசுவர ஆலயப் படிமங்களில் காணலாம். சிவ லீலைச் சிற்பங்களைச் சித்திரிக்கும் தமிழகத்துக் கோயில்களில் பல்லவர் படைத்த காஞ்சிக் கயிலாய நாதர் ஆலயம், திருச்சி மலைக்கோயில், சோழர் சமைத்த தஞ்சைப் பெரிய கோயில்,

கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், திருபுவனம் ஆலயங்கள் பாண்டியரின் கழுகுமலைக் குகைக்கோயில், பல மன்னர்கள் பாங்கோடு உருவாக்கிய தில்லை, மதுரை ஆலயங்கள் சுசீந்திரம் தாணுமாலயப் பெருமான்கோயில் ஆகியவை காலம் போற்றும் கற்காவியங்களாக விளங்குகின்றன.

சிவபெருமானுக்குச் சிறப்பாக உரிய திருநாட்கள் மூன்று. மஹா சிவராத்திரி, திருக்கார்த்திகை, திருவாதிரை நாட்கள் சிவமகிமையை உணர்த்துகின்றன. இத்திருநாட்களின் பழமைச் சிறப்பை ஆலயக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஆந்திரத்து ஸ்ரீசைலத்தில் உள்ள மல்லிகார்ஜுனர் ஆலய முக மண்டபத்தில் சிவராத்திரி நாளில் விஜய நகர வேந்தர் ஒருவர் அந்த மண்டபத்தை அக்கோயிலுக்கு வழங்கியதாகக் கல்வெட்டுக்கள் உள்ளன. சிவராத்திரி வழிபாட்டுக்காகச் சோழ மன்னன் ஒருவன் திரவிய தானம் அளித்ததாகத் திருச்சி கல்வெட்டு ஒன்று கூறுகிறது. திருவள்ளூரை அடுத்த திருப்பாசூரில் உள்ள சிவாலயக் கல்வெட்டு அந்நாளில் ஆடும் அழகனுக்கு ஆதிரை விழா எடுக்கப்பட்டதை அறிவிக்கிறது. தஞ்சை மாவட்டத்துத் திருக்கோடிகாவலில் உள்ள மற்றொரு கல்வெட்டு சோழ வேந்தன் குலோத்துங்கனின் முப்பத்து நான்காம் ஆண்டில் தில்லையம்பல விழுப்பரையன் என்பான் நடராஜப் பெருமானுக்கு ஆதிரை நாளன்று அபிஷேம் செய்விப்பதற்காக நிலமளித்த செய்தியைச் சொல்கிறது. இக்கல்வெட்டுக்கள் யாவும் பன்னூறு ஆண்டுகளாகச் சிவனுக்கு உரிய திருவிழாக் களும் திருநாட்களும் கொண்டாடப்பட்டு வந்திருப்பதையும் சிவ வழிபாட்டின் பழமைச் சிறப்பையும் பறைசாற்றுகின்றன.

சிவவழிபாடு காலத்தைவென்று ஞானத்தில் நிலைகொண்டது அவலங்களை விரட்டி அருள் ஒளிபெற அந்த ஞான மூர்த்தியைப் போற்றுவோம். ஹரஹர மகாதேவா!

நன்றி. — கலைமகள். பிப்ரவரி-1977

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagateswaraswamy Devasthanam, Tirukkadaiyur.

A great temple with great traditions. I enjoyed an hour of useful and benifiting times.

(Sd.) A. A. R. Prabbu,

25—11—76. Commissioner of Income Tax, Madras.

கடிதம்

தி. பூ. பச்சையப்பன் B.A. B.SC. B.T.

தலைமை ஆசிரியர், திருவோத்தூர்,
அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி,
பெருங்கட்டூர் 604 402 2—3—1977.

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தம் பொன்னூர் திருவடிகளைத் தலைமேற் சூடிப்பணிந்து போற்றும் ஓர் விண்ணப்பம்.

ஆண் பனையைப் பெண் பனையாக்கப்பெற்ற திருவோத்தூர் அருள்மிகு இளமுலை நாயகி இடங்கொண்ட வேதபுரீஸ்வரர் குட முழுக்கு விழா இனிதுறவேண்டி தொண்டர் குழாத்துடன் 21—2—77 தொடங்கி 28—2—77 முடிய எட்டு நாட்கள் காவிரி வடபால் அமைந்த 63 தலங்களை இனிதுற வழிபட்டு மீண்டோம். உணவு சமைத்துண்ணவும் ஏற்பாடு செய்தோம். கலந்து கொண்ட அனைவரும் இனிதேதங்கி இளைப்பாறவும் இறைவனைப் பாடிப் பரவவும் தங்கள் அருளாணை, ஆலயப் பொறுப்பாளர் களுக்கு அனுப்பிவைத்திருந்தமை கண்டு, சந்நிதானத்தின் கருணைத் திறத்தை வியந்து தலை தாழ்ந்து கரம் குவித்து நிற் கின்றோம்.

திருப்புள்ளிருக்குவேளூர், திருப்பனந்தாள், திருவையாறு இம்மூன்று திருத்தலங்களில் தங்கும்பேறுபெற்றோம். அங்குள்ள பொறுப்பாளர்கள் எங்களை மகிழ்வோடு வரவேற்று எல்லாவசதி களையும் அளித்து வழியனுப்பிவைத்தமையை என்றும் மறவோம். அவர்கள் ஆதரவு தரவில்லையாயின் எங்கள் சிவதல யாத்திரை இனிதே முடிவுற்றிராது.

அடியேன்,

தி. பூ. பச்சையப்பன்,
குடமுழுக்குக் குழுவினர்.

நான்கு வேதம் ஏன்?

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

வாக்கு வன்மையுள்ளவன் காவியம் இயற்றுகிறான். ரிக் என்பது இறைவனின் எழிற் காவியம். ரிக் வேதம் ஞான நூல்; உலகிலுள்ள பொருளனைத்தையும் விளக்கவல்லது. வாக்கில் ஒளி வாய்ந்தவன் இனிமையாக அன்புடன் பண்புடன் பிறர் நலம் விளைக்கும் உண்மைகளையே பேசுவான். வாக்குச் சாதனை பெற்றவன்தான் ரிக்வேதம் பயின்ற பயனைப் பெறுவான்; வெறுமே வேதமோதியவன் அல்ல. ரிக் என்பது வாக்கு. ரிசம் வாசம் ப்ரபத்யே.

தூய திடமான மனமுள்ளவனே சிறந்த செயலாற்றஇயலும். சிறந்த செயலே வேள்வி யாவது; மனத்தில் நல்ல எண்ணங்கள் நிரம்பினால் புலன்கள் நற்செயல் புரியும். யஜுர்வேதம் வேள்வி நூல். மனச்சாதனை எய்தியவன்தான் யஜுர்வேதம் பயின்ற பயனைப் பெறுவான். யஜுர் என்பது மனம். மனோயஜுர் ப்ரபத்யே. உயிரோட்டத்தை உள்ளும் புறமும் அடக்கிச் சமமாக வைத்துக்கொண்டு உயிரைப் போலவே எதிலும் ஒட்டாமல், நடுநிலையில் இருந்து உள்ளத்தைக் காப்பவனே இன்னிசை பாட இயலும். ஸாமவேதம், இசைவேதம். சமநிலையில் வாழ்ந்து உயிர்நட்பைச் சாதிப்பவன்தான் ஸாமவேதம் பயின்ற பயனைப் பெறுவான். ஸாமம் என்பது பிராணன். ஸாம ப்ராணம் ப்ரபத்யே.

தர்வம் என்றால் நடுக்கம்; அதர்வம் - நடுக்கமின்மை, கண்ணாலும் காதாலும் நல்லனவற்றையே கண்டு கேட்டு வாழ்பவனுக்கு எங்கும் எதிலுமே நடுக்கம் இராது. இந்த நடுக்கமின்மை என்ற சாதனையை எய்தியவன்தான் அதர்வவேதம் பயின்ற பயனுடையவன். நல்ல கண்ணும் காதும் அதர்வத்துக்கு இருப்பிடம். சக்ஷு ஸ்ரோத்ரம் ப்ரபத்யே.

இப்படி வாக்கு வன்மை, மனத்திட்பம், உயிர்நட்பு, கண் காதுகளின் தூய்மை ஆகிய நான்கும் நால்வேதம் பயின்றவனுக்கு வாய்க்கின்றன. வாகோஜ. ஸஹௌஜோ மயிப்ராணாபானௌ.

ரிசம் வாசம் ப்ரபத்யே, மனோ யஜு ப்ரபத்யே,
ஸாம ப்ராணம் ப்ரபத்யே, சக்ஷு ரோத்ரம் ப்ரபத்யே
வாகோஜ ஸஹௌஜோ மயி ப்ராணாபானௌ

(சுக்ல யஜுர்வேதம், 36-1.)

நன்றி. — மஞ்சரி. பிப்ரவரி. '977.

செய்திகள்

மகாசிவராத்திரி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலும், ஆதீனத் திருக்கோயில்களிலும் மகாசிவராத்திரி விழா 16—2—77 புதன் கிழமை சிறப்பாக நடைபெற்றது. அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் மோனத்தவமிருந்து ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு இரவு நான்கு காலங்களிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி வழிபாடாற்றினர்கள்; பக்தர்கள் பலர் வந்து வழிபட்டு அருட்பிரசாதம் பெற்றனர். ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாட்டிற்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ ஞானபுரீசுவரர்திருக்கோயில், ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயில், ஸ்ரீ தருமபுரீசுவரர்திருக்கோயில் களுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினர்கள்.

தருமையாதீனத்திற்குச் சொந்தமான இருபத்தேழு திருக் கோயில்களிலும் சிவராத்திரி விழா வழிபாடு சிறப்பாக நடை பெற்றது. ஆங்காங்கும் பக்தர்கள் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

ஜன்மநட்சத்திர வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 26வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது மாத ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் 3—3—77 வியாழக்கிழமை காலையில் திருமங்கலக்குடி அருள்மிகு மங்கள நாயகி உடனுகிய அருள்மிகு புராணேஸ்வரர் திருக்கோயிலிலும், மாலையில் திருக்கோடிகா அருள்மிகுவடிவம்மை உடனுகிய அருள்மிகு கோடிகாஈஸ்வரர் திருக்கோயிலிலும், விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடை பெற்றது. 'திருக்கோடிகா திருமங்கலக்குடித் திருப்பதிகங்கள்' என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பட்டது. திருப்பதிகப் பாரா யணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன. மாலையில் திரு மங்கலக்குடித் திருக்கோயிலில் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் M. A அவர்களா லும், பேராசிரியர், திரு. இரா. செல்வக்கணபதி M. A. அவர் களாலும். விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. இவ்விரு தலங்களிலும்

அன்பர்கள் பலர் வழிபாட்டில்கலந்துகொண்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர். ஆதீன அடியவர்களும், கல்லூரி ஆசிரியர், மாணவர்களும் உழவாரப்பணி துப்புரவுப்பணிகள் செய்தனர். இரு ஆலயங்களிலும் உள்ள நிர்வாகிகள் குழுவினரை வரவேற்று உடனிருந்து வழிபாடு சமயப் பிரசாரம் முதலிய வற்றைச் சிறப்பாக நடத்திவைத்தார்கள்,

திருபுவனத்தில் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம் சார்பில் 9—3—1977 புதன்கிழமை திருபுவனம் சந்நிதிவீதியில் உள்ள தருமையாதீனம் பதினேழாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருமூர்த்த ஆலயத்தில் குருபூஜை விழா, காலை மாலை இரு வேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. நண்பகல் மகேசுவர பூஜையும், மாலை 6 மணி அளவில் சமயச் சொற்பொழிவும் நடைபெற்றன. தருமை யாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., (முதல்வர் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்) "திருபுவனம் திருக்கோயில் சிறப்பு" என்னும் தலைப்பில் விரிவுரையாற்றினார்கள். வழிபாட்டில் கலந்துகொண்டும், விரிவுரையைக் கேட்டும் பலர் பயன்பெற்றனர்.

திருக்குறுக்கையில் மாசிமக ஏகதின உற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் மாசி மகத் திருநாளை முன்னிட்டு 5—3—77 சனிக்கிழமை ஏகதின உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை ஸ்ரீ காமதகன மூர்த்திக்கும் பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாவும் சிறப்பாக நடைபெற்றன. அட்டவீரட்டத்தலங்களில் மன்மதனைசம்ஹாரம்செய்த சிறப்பிற்குரிய தலமாக விளங்குவது திருக்குறுக்கை என்பது அனைவரும் அறிந்ததே.

இம்மாசிமகநாள் விழாவன்று மாலை 6-மணியளவில் தருமையாதீனம் ஸ்ரீகுருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன் அவர்கள் 'அட்டவீரட்டத் தலங்கள்' என்பதுபற்றி விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள்பலர் விழாவில் கலந்துகொண்டு வழிபட்டும் விரிவுரையை கேட்டும் பயன்பெற்றனர்.

திருக்குவளையில் நெல் மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனத்திற்குச்சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் நெல் மகோற்சவம் 3, 4. 5—3—77 ஆகிய மூன்று நாட்களிலும் சிறப்பாக நடைபெற்றது. குண்டையூர்க்கிழார் பரவையார் மாளிகைக்கு நெல் அரிசி முதலியன கொடுத்தல், இறையருளால் நெல்மலை பெறுதல், சுந்தரர் குண்டையூருக்கு எழுந்தருளி நெல் மலையைக் காணல், திருக்கோளிலியில் திருப்பதிகம்பாடி ஆள் வேண்டி அருள் பெறுதல் முதலிய காட்சிகள் பக்த உற்சவமாக நடைபெற்றன.

4—3—77 வெள்ளிக்கிழமை திருவாரூர் தமிழாசிரியர் வித்துவான். திரு. சு. மு. சுந்தரராசன் அவர்கள் ' சப்தவிடங்கத் தலம் ' என்பதுபற்றி விரிவுரையாற்றினர்கள். பக்தர்கள் பலர் வந்து வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலயத்தில் திருக்கோவையார் விரிவுரை.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலயத்தில் திரு. N. R. முருகவேள் அவர்களால் நிலய மன்றத்தில் 14, 21, 28—2—77 ஆகிய நாட்களில் " திருக்கோவையார் " விரிவுரை தொடர்ந்து நடத்தப்பட்டது. விரிவுரையை அன்பர்கள் பலர் கேட்டுப் பயன்பெற்றனர்.

கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலயத்தில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 26—2—1977 சனிக்கிழமை மாலை 7-மணிக்கு, சென்னை அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர், திரு. M. சூரியராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்த பிறகு நிலய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசம் வேளூர்ப் பதிகங்களைப் பாடினர். விழாத்தலைவர் ' இதுபோன்ற சமயப் பிரசார நிலயங்கள் தமிழ்நாட்டில் எங்கும் நடத்தப்படவேண்டும், தருமையாதீனத்தால் நடத்தப்பெறும் இந்த நிலயத்தால் இங்கு வளர்ந்திருக்கும் தெய்வத்தன்மையினுல் நாம் எல்லோரும் ஈர்க்கப்படுகிறோம், பிரசாரம் பண்பாட்டை வளர்த்து தெய்வீக நெறியை வளர்க்கிறது ' என்று கூறினர்கள். அடுத்து,

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி குமாரசுவாமி மடத்தின் ஏஜெண்ட் திரு. V. கல்யாணசுந்தரம் பிள்ளை காசிவாசம், கங்காஸ்நானம், சிவபூஜை, சத்சங்க ஈடுபாடு ஆகிய நான்கைப்பற்றியும் விளக்கிப் பேசி மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் இந்த நான்கு நற்பேறுகளையும் பெற்று நற்கதியடைய வேண்டும் என்று கூறினார்கள்.

சென்னை D. S. P. திரு. P. V. வெங்கடேஸ்வரன் அவர்கள் தெய்வவழிபாட்டின் பெருமைகளை எடுத்துக்கூறி சில முருகன் பாடல்களையும் பாடியபின் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப் பட்டது. வித்துவான். ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நன்றியுரைகளைக்கூறி கூட்டத்தை உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு 27—2—77 ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னை நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்த மகாலிங்கபுரத்தில் உள்ள ஸ்ரீ பிருகந்நாயகி சமேத ஸ்ரீ மகாலிங்கசுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. சுவாமிக்கும் அம்பாளுக்கும் முறைப்படி விசேஷ அபிஷேக அர்ச்சனைகள் செய்யப்பட்டன, ஆலயத்தி லுள்ள எல்லா மூர்த்திகளுக்கும் அர்ச்சனை செய்யப்பட்டது வழி பாட்டின்போது நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசமும் திரு. N. இராமமூர்த்தி அய்யர் குழுவினரும் திருமுறைப் பாராயணம் செய்தனர்.

வழிபாட்டிற்குப் பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் நடை பெற்றது. ஆலய நிர்வாகிகளான மகாலிங்கபுரம் பக்த சமாஜம் சார்பில்வரவேற்புரைகூறப்பட்டது. அதைத்தொடர்ந்து சென்னை D. S. P. திரு. P. V. வெங்கடேஸ்வரன், திரு. V. N. ஆறுமுகம், திரு. R. சிவஞானம் செட்டியார், புலவர். திரு. K. ஆறுமுகம் ஆகியோர் சமய வழிபாட்டின் பெருமையை எடுத்துக்கூறியும் ஆதீனத்தின்தொண்டைப் பாராட்டியும்பேசினார்கள். வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் மாத வழிபாட்டின் சிறப்புக்களையும் வரவேற்புரை நன்றியுரைகளையும்கூறி, கோயில் நிர்வாகத்தினருக்கும் நன்றிகூறினார்கள், கோயில் நிர்வாகஸ்தர்கள் நன்றி கூறுகையில் இந்தக்கோயிலுக்கு அடிக்கடி வந்து வழிபாடு நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். வழிபாட்டில் பலர் கலந்துகொண்டு வழிபட்டுப் பயன் பெற்றனர்.

எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(நளஃ பங்குனிமீ 1உ முதல் 30உ முடிய)
(14—3—1977 முதல் 12—4—1977 முடிய)

ஸ்ரீ நளஃ பங்குனிமீ 1உ சோமவாரம் பூராட நக்ஷத்திரத்தில் வணிசைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 5 நாழிகை 35 விநாடிக்கு மேஷ லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரியபகவான் லோகசுபிட்சார்த்தமாக கும்பராசியிலிருந்து மீன ராசியில் சங்கிரமணமாக ஸௌரமான நளஃ பங்குனி மாதப்பிரவேசம் செய்கிறார். பங்குனிமீ 7உ பானுவாரம் பிங்களஃ சாந்திரமான சைத்திர மாதப்பிறப்பாகிறது. பிங்கள வருஷத்திய இராஜாசூரியபகவானுகிறார். சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனாவது லோகத்திற்கு சுபிட்சம் ஏற்படும். ஆன்றோர்கள், நாட்டின் நலனுக்குச் செயலாற்றுவார்கள். அறஸ்தாபனங்களின் ஸ்ரீமான்களால் தேவாலயத்திருப்பணிகள் தெய்வ கைங்கரியங்கள் லோகோபகார தர்மங்கள் பலவாக ஏற்பட்டு நடந்துவரும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் திருஅவதாரமாக வந்துள்ள குருமகான்களின் திருநோக்கில் நடந்துவருகிற தேவாலய உற்சவங்கள் சிறப்பு பூசைகளினால் லோக சுபிட்சார்த்தமாக நிகழ்த்துகின்ற யாகங்கள் வேத மந்திரங்களின் மகத்துவத்தினால் உலக நாடுகளில் ஏற்படுகின்ற குழப்பங்கள் நீங்கும். அரசாட்சியில் மனுநீதி பரிபாலனம் மேலோங்கி தேசம் நலம்பெறும். பிரஜைகள் அனைவரும் பசிபிணியின்றி தெய்வ சிந்தனையுடையவர்களாகி க்ஷேமகரமாக வாழ்ந்துவருவார்கள்.

இராகு கேது பெயர்ச்சி

குறிப்பு :- நளஃ பங்குனிமீ 29உ சோமவாரம் உத்திராட நக்ஷத்திரத்தன்று சூரிய உதயம் முதல் 30 நாழிகை 2 விநாடிக்கு கன்னியா லக்கினத்தில் இராகு சித்திரை நக்ஷத்திரம் 2ஆம் பாதத்தில் கன்னியிலும் கேது ரேவதிநக்ஷத்திரம் 4 ஆம்பாதத்தில் மீனத்திலும் அப்பிரதக்ஷணமாகப் பெயர்ச்சியாகின்றன. அதனால்

உலகத்திற்கு 100க்கு 60 பாகம் சுப பலன்களும் 40 பாகம் அசுப பலன்களும் ஏற்படுவதாகும்.

இராகுவானது துர்க்கை, காளி, சக்தி, அம்ஸத்தை உடையது. அது இரு கால் இராசியான கன்னியில் 18 மாதங்கள் சஞ்சரிப்பதால் பிரஜைகள் காலரா வாந்திபேதி வைசூரி ஆகியவற்றின் கொடுமையில் பிடிக்கப்படுவர். அதே 18 மாதங்கள் மீனத்தில் சஞ்சரிக்கிற கேதுவால் உலக நாடுகளில் யுத்தம் ஏற்படும். அடிக்கடி பூமியதிர்ச்சி ஏற்பட்டுப் பொருட்சேதம் ஜனச்சேதம் ஏற்படும். அதனின்றும் மீள்வதற்கு உபாயம் யாதோவெனின் பிரஜைகள் ஒவ்வொருவரும் சிவன்கோயிலுக்குச் சென்று பிரதட்சணம் வந்து சிவன் அம்பாள் துர்க்கை ஆகிய தெய்வங்களைப் பூசித்து பிரார்த்திப்பதால் உய்வு உண்டாகும். முக்கியமாய் சித்திரை நக்ஷத்திரம் ரேவதி நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் இராகு கேது கிரக சாந்தி செய்துகொள்க.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

(சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ.)

மேஷ ராசி 9 பாதங்களும் சுமார்பலனை நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வசதியை அளித்துவரும். சகோதரர் பந்து அம்மான்களால் பொருள் செலவுகளும் தொழில்துறை அபிவிருத்தி செலவுகளும் மிகுந்து இருக்கும். புத்திரர்களுக்கு சௌக்கிய பலனும் இராசாங்கத்தில் செல்வாக்கும். தரும். தாம்பத்திய வாழ்க்கையில் சந்தோஷம் நிலவும். வழக்கு விவகாரங்களில் அனுகூலங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். செய்தொழில்களில் விருத்தி பலன் ஏற்பட்டு வரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை¾ – உரோகிணி – மிருகசீர்ஷம்½

(இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வு. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். குடும்பத்தில் முக்கிய விசேஷங்களுக்கு வேண்டும்போது பணவசதியை அளித்துவரும். சகோதரருக்கு இராசாங்க காரியங்களில் பிர பலம் தரும். வித்தியாவியாபாராதி கலைத்துறையில் முற்பகுதியில் அபிவிருத்தி பலனைவும் பிற்பகுதியில் சாதாரண பலனைவும் இருக்கும். பூகிரக ஸ்திர சொத்துக்களில் எதிர்பாராத சிரமம் தோன்றினும் சுலபமாகச் சமாளித்தல் ஆகும். தாம்பத்திய வாழ்க்கை சௌக்கியமாக நடந்துவரும். செய்தொழில்களில் நற்பலன் ஏற்படுவதாக இருந்துவரும். புதன் வியாழன் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½– திருவாதிரை–புனர்பூசம் ¾

(கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலனக நடக்கும். தனதி சௌகரியங்கள் குறைவின்றி வருமானங்களை ஏற்படுத்தி வரும். சுப காரியங்களில் விசேஷமான செலவுகளும் ஆகும். சகோதர ருக்கு சுபமும் நற்கியாதியும் ஏற்படும். நவீன கிரக வாகனங்களை ஏற்படுத்தும். பொது சொத்துக்களை நிர்வகிக்கும் பொறுப்பைத் தரும். ஆயினும் சில சர்ச்சைகள் வந்து பின் நீங்கும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் இராசாங்க பிரபலத்தைக்கொடுக்கும் வெள்ளி சனி சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுமார் பலனக நடக்கும். குடும்பாபி விருத்தியில் சிரமம் தோன்ருமல் சௌகரியத்தை ஏற்படுத்தி வரும். 15ௗ முதல் பத்திரலிகித ஒப்பந்தங்களில் நன்மையை ஏற்படுத்தும் ; ஆயினும் காலதாமத பலனும். சகோதரருக்கு வித்துவத்துவத்தில் ஓர் நன்மையை உண்டாக்கும். இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி பலனை ஏற்படுத்திவரும். ஓர் தீர்த்த யாத்திரை போய்வரச் செய்யும். ஓர் விபத்து வந்து தப்பும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு சகஸ்ரநாம அருச்சனை செய்ய நலம் தரும். செய்தொழில்களில் காரியங்கள் விக்கினமின்றி நடந்துகொண்டிருக்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணச் செலாவணி கள் கண்யமாக இருந்துவரும். வரவேண்டியவைகள் வரவு ஆகிக் கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிரசித்த மும் நற்பலனும் உண்டாகும். சகோதரர்களில் ஒருவருக்கு மூர்ச்சைபோன்ற நலிவும் ஆயாசமும் காணும்; புத்திரர் பௌத்திரர்களுக்கு சௌக்கியபலன் தரும். கணவன் மனைவிய ரிடையே சொற்பமனோவேகம்வந்து உடனுக்குடன் தணியும் செய்தொழில்களில் மேன்மை ஸ்திதியைக்கொடுக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½
(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் சுப பலனாக நடந்து வரும். தன பாக்கியம் பெருகும். சகோதரர் சௌக்கியமாகவும் தொழில் துறை முன்னேற்றத்துடனும் இருந்து வருவார்கள். சுகமும் கிரக வாகனங்களின் சௌகரியமும் மேலாக இருந்துவரும். புத்திரர்களின் கல்வி தொழில் துறைகள் மேன்மை ஸ்திதியில் இருந்துவரும். வியாஜ்ஜிய விவகாரங்களில் ஜெயம் தரும். மனைவிக்கு உஷ்ணாதிக்கம் பொருந்தி சிரோபாதை போன்ற நலிவு வந்து குணமாகும். செய்தொழில் அல்லது உத்தியோகம் இராசாங்க கண்யத்துடன் நடந்து கொண்டிருக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾
(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். தன வசதி பூர்வார்ச்சிதமான பொருள்களின் சௌகரியங்கள் இருந்துவரும். சகோதரர்கள் தொழில்துறை சௌகரியத்துடன் இருப்பார்கள். இருப்பினும் மிச்சிரமாக இருந்து கொள்வார்கள். சரீரத்தில் மார்புவலி வயிற்றுவலி வந்து குணமாகும். பத்திரம் எழுத்து மூலமான லேவாதேவிகளில் நன்மைகள் இருந்து வரும். கோர்ட் வழக்குகளில் ஜெய பிராப்தியாகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செய்தொழில்களில் சாதாரணபலனாக இருந்துவரும். சனி ஞாயிறு சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.
(தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு.)

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணச் செலாவணிகள் மதிப்பாகவே இருந்துவரும். சகோதரர்களின் நலம் சாதாரணமாக இருந்துவரும். மார்புவலி போன்ற உபத்திரவம் வந்து குணமாகும். ஞாயிற்றுக்கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். தாம்பத்திய வாழ்வில் அன்யோன்யம் நிலவும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் எதிர்ப்பு உண்டாகும். எல்லாக் காரியங்களும் மனோவேகத்துக் கிடையே செயல்படும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼
(யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். தன வரவு சீராக இருந்துவரும் குடும்ப விஷயமாக அலைச்சல் ஏற்படும்.

சகோதரபந்து அம்மான்களின் அனுசரணை உதவிகள் இருந்து வரும். வித்துவத்துவம் கலை எழுத்துத்துறையில் முன்னேற்ற நிலைமையை உண்டுபண்ணும். 15வ க்குப்பிறகு தன்குழந்தைக்கு அஜீரணம்வந்து குணமாகும். தாம்பத்தியவாழ்வு சுமுகமாக நடந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் புத்தி சாதுரியமாக நடந்துவரும். புதன் வியாழன் சுபமாகும்.

10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – கா. கி.)

மகர ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபி விருத்தியில் பண வரவும் வாழ்க்கை வசதியும் ஏற்பட்டு வரும். மனோவேக பேச்சும் சம்பவமும் வந்து உடன் ஆறுதல் நிலைமை யாகும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் நற்பலன் வந்து கொண்டிருக்கும். மாதாவிற்கு இரத்தக் கொதிப்பு போன்ற நலிவு வந்து குணமாகும். புத்திர சௌக்யம் நன்ருக இருந்து வரும். தாம்பத்திய வாழ்வு சுமுகமாக நடந்துவரும். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் சாதாரண பலனுக இருந்து வரும். வெள்ளி சனி சுபமாகும்

11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾

(கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. த.)

கும்பராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத் தரும். பண வசதி போஜன சௌகரியம் திருப்தியளிப்பதாக இருந்துவரும். சரீரத்தில் இடிபடுதல், காயப்படுதல் நேரும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். வித்துவத்துவம் புத்தி சாதுரிய அலுவல்களில் நன்மை ஏற்பட்டுவரும். புத்திரர்களின் தொழில் துறையில் வருமானமும் இராசாங்கவனுகூலமும் ஏற் படும். தாம்பத்தியவாழ்வு சுமுகமாக நடந்துவரும். வியாஜ்ஜிய விவகாரங்கள் ஜெயிக்கும். செய்தொழில் சாதாரண நிலைமையில் இருந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

(தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பணச் செலாவணி சரளமாக இருந்துவரும். சகோதரர் தாரபுத்திரர் களினுல் அடிக்கடி அவசிய செலவுகளையும் ஏற்படுத்திவரும். தேகஉஷ்ணம் பொருந்தி கண் எரிச்சல், குத்தல், சிரோபாதை வந்து குணமாகும். ஞாயிற்றுக்கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் நன்மதிப்பு தரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மாறுதல் பிரச்னையை ஏற்படுத்தும், செவ்வாய் புதன் சுபமாகும்.



திருத்தொண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜை விழா

11 — 5 — 77

உ

சிவமயம்

திருவாமூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள்

குருபூஜை விழா

"தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே"

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசியுடன் திருநாவுக்கரசு சுவாமிகள் அவதாரத்தலமாகிய திருவாமூரில் – ஸ்ரீ அப்பர் திருக்கோயிலில் 9—5—'77 திங்கட் கிழமை முதல் 11—5—'77 புதன்கிழமை முடிய மூன்று நாட்கள் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா சிறப்பாக நடைபெறும். மூன்று நாட்களிலும் சிறந்த முறையில் அபிஷேக ஆராதனைகள் முதலியன நிகழும்.

குருபூஜைத் திருநாள் 11—5—'77

11—5—'77 புதன்கிழமை காலை 10-30 மணிக்கு ஸ்ரீ அப்பர் சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழும். அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தரிசனத்திற்கு எழுந்தருள்வார்கள்.

திருமுறை மாநாடு, திருமுறைப் பாராயணம், பண்ணிசையரங்கு, கருத்தரங்கம் முதலியவற்றுடன் நடைபெறும். இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர், திரு. K. பாலசுப்பிரமணியம் I.A.S., உயர்நீதிமன்ற நீதிபதி கனம். சூரியமூர்த்தி B.A., B.L., தவத்திரு. ஊரன் அடிகள், திரு. V. வெங்கடசுப்பா ரெட்டியார், திரு. க. வெள்ளைவாரணனார், திரு. அ. நடேச முதலியார் முதலிய பேரறிஞர்கள் பலர் கலந்துகொள்கின்றனர்.

ஸ்ரீ அப்பர்சுவாமிகள் குருபூஜைவிழாவிற்குக் காணிக்கைகள், நன்கொடைகள், அபிஷேகப் பொருள்கள், மாகேசுவரபூசைக்குரிய பொருள்கள் அனுப்ப விரும்புவோர்:- G வாகீசம் பிள்ளை, செயலாளர், திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாக் குழு, கனகசபைநகர், சிதம்பரம் என்ற முகவரிக்கும், குருபூஜை விழாவின்போது 7, 8, 9, 10, 11—5—'77 ஆகிய நாட்களில் அனுப்புவோர்:- செயலாளர், திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாக் குழு. ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருக்கோயில், திருவாமூர், பண்ணுருட்டி வழி, தெ. ஆ. மாவட்டம் என்ற முகவரிக்கும் அனுப்பலாம்.